விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 269 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 29 புதன்கிழமை (14.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

அரச ஊழியர்களை குறைக்க முன்வந்த ரணில்

## அதிக எண்ணிக்கையில் எவ்வாறு அமைச்சர்களை நியமிப்பார்

### ஜனாதிபதியிடம் பஃப்ரல் அதிரடிக் கேள்வி

(கொழும்பு)
திறமையின்மை அடிப்படையில் அரச ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்க முன்வந்த ஜனாதிபதி, அதிக எண்ணிக்கையிலான அமைச்சர்களை நியமிப்பதற்கு எவ்வாறு அனுமதியளித்தார் என சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு(பஃப்ரல்) கேள்வி எழுப்பியுள் 16

## பயங்கரவாத சட்டத்தை இரத்துச் செய்யக்கோரி

4ஆவது நாளாக கையெழுத்துப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)
பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக்கோரி நாடளாவிய ரீதியில் ஊர்திவழிப் போராட்டமாக சென்றுகையெ 15

ஜெனிவாவில் இலங்கை மீது

# வலுவான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்

## சர்வதேச அமைப்புக்கள் வலியுறுத்து

(ஜெனிவா) இலங்கை மீது ஜெனிவாவில் வலுவான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் நாடுகளிடம் வலியுறுத்தியுள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபை ஃபோரம் ஏசியா, மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணைக்குழு ஆகிய அமைப்புக்களே இவ்வாறு வலியுறுத்தியுள்ளன. (15ஆம் பக்கம் பார்க்க)



ஜெனிவாவில்

## சீனப் பிரதிநிதியுடன் அலி சப்ரி சந்திப்பு

(ஜெனிவா)
மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வில் கலந்துகொள்வதற்காக ஜெனிவா சென்றிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் சப்ரியை ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம்மற்றும்சுவிட்சர்லாந்தில் உள்ள சர்வதேச அமைப்புகளுக்கான சீனாவின் நிரந்தரப் பிரதி 15

வவுனியா தாண்டிக்குளத்தில்

## ரயில் மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

(வவுனியா)
வவுனியா தாண்டிக்குளத்தில் ரயில் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை கொழும்பில் இருந்து யாழ். நோக்கிப் பயணித்த புகையிரதத்திலேயே குறித்த நபர் மோதுண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா ஈஸ்வரிபுரத்தை சேர்ந்த 44 15

## பொய்யான ஏமாற்று அரசியலுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)
பொய்யான ஏமாற்று அரசியலுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் 02

தாய்ப்பால் புரைக்கேறியதில்

## 4 நாட்களேயான குழந்தை மரணம்

(கரணவாய்)
தாய்ப்பால் புரைக்கேறியதில் பிறந்து நான்கு நாட்களேயான பெண் குழந்தை ஒன்று மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளது.

மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு யாழ். போதனா வைத்தியசாலை 15

## புளியங்குளத்தில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)
வவுனியா புளியங்குளத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியா நகரப் பகுதியிலிருந்து யாழ். நோக்கி புளியங்குளம் பாடசாலைக்கு முன்பாக சென்று கொண்டிருந்த ஹயஸ் ரக வாகனம் எதிரே வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டு குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட் 15

19ஆம் திகதி

## விசேட அரச விடுமுறை

(கொழும்பு)
எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. 15

## உணவு பாதுகாப்புக்கு விசேட பொறிமுறை

### ஜனாதிபதி ரணில் நடவடிக்கை

(கொழும்பு)
உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்ய, கிராமிய பொருளாதார மேம்பாட்டு மையங்களை வலுவூட்டும் பல்துறைசார் கூட்டுப் பொறிமுறையொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று ஆரம்பித்து வைத்துள்ளார்.

எந்தவொரு நெருக்கடியான நிலையிலும் மக்கள் ஆரோக்கியமான உணவைப் பெறு 02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விபரீத முடிவெடுத்த இளம் யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

விபரீத முடிவெடுத்த இளம் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் கலட்டி பகுதியில் நேற்றுக் காலை இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது

இதில் அதே பகுதியை சேர்ந்த சிவகுமாரன் நிருத்திகா வயது (24) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மரணம் தொடர்பிலான விசாரணையினை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7 )

## உணவு...

வதற்காக சமூக - பொருளாதார சூழலை உருவாக்குவதே இதன் எதிர்பார்ப்பாகும்.

உணவு இன்மையால் எந்தவொரு குடிமகனும் பட்டினியால் வாடக் கூடாது மற்றும் எந்தவொரு குழந்தையும் போஷாக்கு குறைபாட்டால் பாதிக்கக்கூடாது என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். (ம-7)

## பொய்யான...

கூறுகையில், மேலும் 12 அமைச்சரவை அமைச்சர்களை நியமிக்க இருப்பதாக கூறுகின்றார்கள்.

தற்போது இருக்கும் 20 அமைச்சரவை அமைச்சர்களையும் அந்த 12 அமைச்சர்களையும் அத்துடன் 37 இராஜாங்க அமைச்சர்களையும் சேர்த்தால் 69 அமைச்சர்கள்.

இந்த 69 அமைச்சர்களை எதற்காக நியமிக்கின்றார்கள்? அதிபர் நியமனத்தில் 134 வாக்குகளை பெற்றுக்கொடுத்தமைக்கு நன்றிக்கடன் செலுத்தப்படுகின்றது.

அத்துடன் வெட்கம் இல்லாத கைப்பாவை அரசியல்வாதிகள் ராஜபக்ஷர்களை பாதுகாத்துக் கொண்டிருக்கின்றார்கள். (ம-7)

# கண் வைத்திய நிபுணர் குகதாசன் காலமானார்



(யாழ்ப்பாணம்)

கண் வைத்திய நிபுணர் சரவணமுத்து குகதாசன் நேற்று அதிகாலை காலமானார். அவருக்கு வயது 74.

யாழ். போதனா வைத்தியசாலையில் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக கண் வைத்திய நிபுணராக கடமையாற்றிய மருத்துவர் குகதாசன் அவர்கள் சிவபூமி அறக்கட்டளையின் பொருளாளராக இருந்து அரும் பெரும் சேவை ஆற்றியவர்.

அவரின் இறுதிக் கிரியைகள் கோண்டாவில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் இன்று முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும். (ம)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வசிக்கக்கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. இ

**077 745 1625**


# திறப்பு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடத்தில் கல்வி பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கும் சம வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான ஆதரவு நிலையம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப் பீடக் கட்டடத் தொகுதியின் கீழ்த் தளத்தில் திறந்து வைக்கப்பட உள்ளது.

இதற்கான திறப்பு விழா நிகழ்வு நாளை வியாழக் கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெற உள்ளது. (ம-7.18)


## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கற்பக பிள்ளையார் கோவிலையும் பிரதேச சபையையும் அண்மித்த பகுதியில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது.
பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரம்
( 3 பரப்பாகவும் பிரித்து தரப்படும்.)

**077 538 4132**
**070 617 2892**

(12771)



## விழிநீர் சொரிகின்றோம்



எமது வைத்தியசாலையில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. **ஜெ.குறிஞ்சிக்குமரன்** அவர்களின் பாசமிகு தந்தை

அமரர்

**சுப்பிரமணியம் ஜெயபாலசேகரம்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4906)

**வைத்தியர்கள், சக பணியாளர்கள்**
**கிராமிய சித்த வைத்தியசாலை - பள்ளமடு, மன்னார்.**



## மரண அறிவித்தல்

### Dr.சரவணமுத்து குகதாசன்
### (கண் சத்திரசிகிச்சை நிபுணர்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 07.09.1948 | 13.09.2022 |



நெட்டிலிப்பாய் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.சரவணமுத்து குகதாசன் நேற்று (13.09.2022) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - நல்லம்மா தம்பதியரின் அன்புப் புத்திரனும் காலஞ்சென்றவர்களான சுந்தரராமலிங்கம் - கமல்ராணி தம்பதியரின் அன்பு மருமகனும் கலைவாணியின் (அதிபர் - சிவபூமி பாடசாலை) அன்புக் கணவரும் லிஷாயினி, ஷஞ்ஜீவா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நிதர்சன், கார்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் Dr.பாலச்சந்திரன், சுந்தரேஷ்வரி, மகேஷ்வரி, சிவநேசன், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் இந்திராணி, காலஞ்சென்ற M.P.கணேஷன் மற்றும் ஸ்ரீபதி, நிர்மலாஜினி, காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் சுமதி, கஜராம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஷஜிகன், ரேஷிகா, லக்ஷ்மிதா, பிரதிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2022) புதன்கிழமை காலை 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் கோண்டாவில் ஆலடி இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"துவாரகை"
ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(12775)

தகவல்:
குடும்பத்தினர்



## இதய அஞ்சலி



சிவபூமி அறக்கட்டளையின் நிதிப்பொறுப்பாளரும் எமது அறக்கட்டளையின் வளர்ச்சிக்கு அயராது பணியாற்றியவரும் கோண்டாவில் சிவபூமி சிறுவர் மன விருத்திப் பாடசாலையின் அதிபர் திருமதி **கலைவாணி குகதாசனின்** கணவருமாகிய

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07.09.1948 | 13.09.2022 |

கண் வைத்திய நிபுணர்

### Dr. சரவணமுத்து குகதாசன்

அவர்கள் 13.09.2022 அன்று காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(12774)

**நிர்வாக சபை**
**சிவபூமி அறக்கட்டளை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர உதவிகள் தாமதமானால் உணவுப் பஞ்சம் மோசமடையும்

## இலங்கைக்கு ஐ.நா எச்சரிக்கை

(கொழும்பு)

**பலவீனமான விவசாய உற்பத்தி, விலைவாசி உயர்வு மற்றும் தொடரும் பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மை மோசமடையக்கூடும் என உணவு மற்றும் விவசாய அமைப்பும் உலக உணவுத் திட்டமும் எச்சரித்துள்ளன.**

6.3 மில்லியன் மக்கள் மிதமான மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்வதுடன், போது மான உயிர் காப்பு மற்றும் வாழ் வாதார உதவிகள் வழங்கப்படா விட்டால் அவர்களின் நிலைமை மோசமடையக் கூடும்.

ஏறக்குறைய 30% மக்கள் ஏற்கனவே உணவுப் பாது காப்பின்றி உள்ளனர். எனவே அவசர உதவி தாமதமானால், இலங்கையில் உணவுப் பாது காப்பின்மை மோசமடையக் கூடும் என இலங்கை உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிரதிநிதி விமலேந்திர சரண் தெரிவித்தார்.

ஏறக்குறைய இரண்டு பருவகாலமாக பயிர்ச் செய்கை தோல்வியடைந்துள்ளமை காரணமாக இலங்கையில் உணவு உற்பத்தி கிட்டத்தட்ட 50% குறைந்துள்ளது மற்றும் அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக உணவு மற்றும் தானியங்களின் இறக்குமதியும் குறைந்துள்ளது. (நி)

# பயங்கரவாத தடைச் சட்டம் திருத்தப்பட வேண்டும்

## நியூசிலாந்து வலியுறுத்து

(ஜெனிவா)

பூரணமான கருத்து சுதந்திரத்தை உறுதி செய்யுமாறு இலங்கையிடம் நியூஸிலாந்து அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 51 ஆம் அமர்வுகளில் பங்கேற்றுள்ள நியூசிலாந்து பிரதிநிதிகள் இந்த விடயத்தை தெரிவித்துள்ளனர்.

அமைதியான முறையிலான போராட்டங்கள் மற்றும் கருத்து சுதந்திரத்தை முழு அளவில் அரசாங்கம் உறுதி செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் பாரிய போராட்டங்கள் தொடர்பில் அதிகாரிகள் அமைதியான அணுகு முறைகளை பின்பற்றியிருந்தனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


எனினும், அண்மைக் காலமாக போராட்டக்காரர்கள் மீது அரசாங்கத்தின் அணுகு முறை குறித்து கரிசனை வெளியிடுவதாக தெரிவித்துள்ளது.

அமைதியான போராட்டங்களை முன்னெடுக்கவும் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தவும் பூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் நியூசிலாந்து பிரதிநிதி லுசிடுன்கன் தெரிவித்துள்ளார்.

இதன்போது, பயங்கரவாத தடைச்சட்டத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

பேண்தகு சமாதானத்தையும் சுபீட்சத்தையும் ஏற்ப டுத்துவதற்கு பொறுப்பு கூறல் மிகவும் அவசியமானது என நியூசிலாந்து தெரிவித்துள்ளது. (நி)

# மருந்துகள் கொள்வனவிற்கு மேலதிகமாக 100 மில்லியன் டொலர்



(கொழும்பு)

மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக சுகாதார அமைச்சுக்கு 100 மில்லியன் டொலர்களை மேலதிகமாக ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சரவை பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

அத்தியாவசிய மருந்துகள் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக குறித்த நிதி மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். (நி)

# இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை தொடர்பில் இந்தியா மௌனம் காப்பது ஏன்?

## பா.ம.க நிறுவுநர் டாக்டர் ராமதாஸ்

(சென்னை)

இலங்கை இனப்படுகொலைகள் நிகழ்ந்து 13 ஆண்டுகள் ஆகியும் அதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படாததை ஏற்க முடியாது என்று பா.ம.க நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இலங்கையில் வாழும் ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான நடவடிக்கைகளை சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவில்லை. இனியும் தாமதிக்காமல் அதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் என ஐ.நா மனித உரிமை பேரவையில் இந்தியா வலியுறுத்தியுள்ளது. ஈழத்தமிழர்களுக்கு நீதி வழங்குவதில் இந்தியாவின் நிலை வரவேற்கத்தக்கது. ஆனால், போதுமானதல்ல.

ஐ.நா மனித உரிமை பேரவையில் ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என வலியுறுத்திய இந்தியா, அங்கு நடைபெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு காரணமானவர்களை தண்டிப்பது குறித்து எந்த கருத்தும் தெரிவிக்காதது ஏமாற்றமளிக்கிறது என அவர் தெரிவித்தார். (நி)

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்துங்கள்

## ஐ.நாவில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

(ஜெனிவா)

இலங்கை தொடர்பிலான ஐ.நாவின் 46/1 தீர்மானத்தை தாம் திட்டவட்டமாக நிராகரிப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஜெனிவாவில் தெரிவித்தார்.

இனியும் தாமதிக்காது பொறுப்புக்கூற வைக்க ஐ.நா பாகாப்புசபைக்கு இலங்கையை பாரப்படுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துமாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனித உரிமைகளுக்கான அமைச்சர் வி.பி.லிங்கஜோதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தொடங்கியுள்ள ஐ.நா மனித உரிமைச் சபையின் 51 ஆவது கூட்டத் தொடரில் முன்வைக்கப்பட்ட இலங்கை தொடர்பிலான அறிக்கையின் போதே இந்நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைச்சபை இது வரை தீர்க்கமாக அணுகுமுறையில் செயற்படவில்லை என்று நாங்கள் நம்புகிறோம்.

தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்கு, இனப்படுகொலைக்கு இலங்கை பொறுப்புக் கூற வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் ஓர் அங்கமாக் தமிழர் நிலங்கள் தொடர்ந்து இலங்கை ஆயுதப்படைகளுடன் பாதுகாப்புடன் தொடர்ந்து அபகரித்தும் சிங்கள குடியேற்றங்களை மேற்கொண்டும் வருகின்றது.

இலங்கை அரசாங்கத்துக்கும் மேலும் மேலும் கால அவகாசம் கொடுக்காமல், விரைந்து செயற்படுமாறு சபையினைக் கேட்டுக்கொள்வதோடு, தமிழர்களுக்கு எதிராக தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையினை தடுக்கவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் வேண்டுகின்றேன்.

இலங்கையை பொறுப்புக் கூற வைக்க ஐ.நா பாகாப்பு சபைக்கு இலங்கையைப் பாரப்படுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துமாறு வேண்டுகிறோம். தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும் எனவும் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறைடேர்ஸ் பிறீமியர் லீக்-2022

## யாழ். சலஞ்சேர்ஸ் அணி வெற்றி



பிறைடேர்ஸ் பிறீமியர் லீக் தொடரின் 4 ஆவது போட்டி அண்மையில் நடைபெற்றது. அதில் யாழ். சலஞ்சேர்ஸ் அணி, யாஸ்கீற்றர்ஸ் அணியை 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாஸ்கீற்றர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடிய போது 18 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. அன்புஜன்-13, கானாமிர்தன் -18, தயூஸ்ரன்-23, பிரணவன் -11 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சுஜன் 4 ஓவர்களில் 17 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் ஜெரிக் துஸாந்த் 2.4 ஓவர்களில் 19 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் பிரவீன்ராஜ் 4 ஓவர்களில் 31 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் பிரசன்னா 3 ஓவர்களில் 11 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கிஷாந்துயன் 3 ஓவர்களில் 12 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

111 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களம் இறங்கிய யாழ். சலஞ்சேர்ஸ் அணி 19.3 ஓவர்களில் 111 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களை இழந்தது. பந்து வீச்சில் கானாமிர்தன் 3 ஓவர்களில் 17 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் ஞானாநந்த சர்மா 4 ஓவர்களில் 19 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (நி)

### அவுஸ்திரேலியா அணிக்கெதிரான

# இருபது-20 தொடர்

## இந்திய அணி அறிவிப்பு




அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான இருபது-20 தொடருக்கான இந்திய அணியை பி.சி.சி.ஐ அறிவித்துள்ளது. மூன்று இருபது-20 போட்டிகளில் விளையாட அவுஸ்திரேலிய அணி இம் மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் இருபது-20 போட்டி வரும் 20 ஆம் திகதி தொடங்குகிறது. இந்தத் தொடருக்கான இந்திய அணியில் தீபக் சாஹர் இடம்பெற்றுள்ளார்.

காயம் காரணமாக ஓய்வில் இருந்த அவர் இந்திய அணிக்கு திரும்பியுள்ளார். அவுஸ்திரேலிய தொடருக்கான இந்திய அணியில் ரோகித் சர்மா (கப்டன்), கே.எல்.ராகுல் (துணை கப்டன்), விராட் கோலி, சூர்யகுமார் யாதவ், தீபக் ஹூடா, ரிஷப் பண்ட் (விக்கெட் கீப்பர்), தினேஷ் கார்த்திக் (விக்கெட் கீப்பர்), ஹர்திக் பாண்டியா, ஆர்.அஷ்வின், யுஸ்வேந்திர சாஹல், அக்சர் படேல், புவனேஷ்வர் குமார், முகமது ஷமி, ஹர்ஷல் படேல், தீபக் சாஹர், ஜஸ்பிரித் பும்ரா ஆகியோர் இடம்பெற்றுள்ளார்.

மேலும், இத்தொடருக்கு பிறகு இந்திய அணி தென் ஆபிரிக்க அணிக்கு எதிராக 3 இருபது-20 மற்றும் 3 ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. இருபது-20 தொடர் செப்டெம்பர் 28 முதல் ஒக்டோபர் 4 வரை நடைபெறும். (4)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2698

**தயாழினி**


அழ வைத்து பார்க்கும் உறவுகள் இருக்கும் இந்த உலகினில்...



நம்மை அழகுபடுத்தி பார்க்கும் ஒரே உறவு அம்மா மட்டும் தான்...!

**நிரோஜன்**

தான் அழகு என்பது மயிலுக்கு தெரியாது!
தான் அழகில்லை என்பது காகத்திற்கு தெரியாது!
பிரச்சினை எல்லாம் நம்மகிட்ட தான்!!!



**ஜனனி**

ஓடி ஓடி உதவி
செய்யும் வரை தான்
அனைவராலும்
மதிக்கப்படுவாய் ஒரு முறை
மறுத்துப் பார் அடுத்த
நொடியே அடியோடு
மறுக்கப்படுவாய்

**துவாரகன்**

என்ன தான் பணம் புகழ் என்று சந்தோஷமாக வாழ்ந்தாலும் எல்லோரும் ஏக்கத்தோடு சொல்வது



பள்ளி வாழ்க்கை திரும்ப வந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்...!

**சரனா**

பையனை இட்லி மாதிரி பொத்தி பொத்தி எடுத்தா அது அம்மா



தோசை மாதிரி பொரட்டி பொரட்டி எடுத்தா அது பொண்டாட்டி

**தயாளன்**

பொருத்தமற்ற இடத்தில் நம்மை புகுத்திக் கொள்ள முயற்சிப்பது நமக்கு அழகல்ல



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்துத் தட்டுப்பாட்டால்
## மருத்துவமனைகள் முடங்கும் அபாயம்

(கொழும்பு)

**நாட்டிலுள்ள மருத்துவமனைகளில் மருந்துத் தட்டுப்பாடு அதிகரித்து வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

கொழும்பு தேசிய மருத்துவமனை மற்றும் தேசிய புற்றுநோய் மருத்துவமனைகள் இந்த பற்றாக்குறையால் முடங்கியுள்ளதாக அதன் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

இந்தப் பற்றாக்குறையால் நாளாந்த மருத்துவமனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை இறக்குமதித் தடை திருத்தப்படும்
## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக சில இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்ட தடை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை திருத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின் போது, அமைச்சர் ரமேஷ் பத்திரன இதனை தெரிவித்தார்.

தற்காலிக நடவடிக்கையாக சில பொருட்களின் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக இறக்குமதி கட்டுப்பாடு அமுலில் உள்ளதாகவும் அது தீர்க்கப்பட்டதும் அனைத்து கட்டுப்பாடுகளும் நீக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இறக்குமதித் தடை காரணமாக சில துறைகளில் தடை ஏற்படுத்திய தாக்கத்தை கருத்தில் கொண்டு, அரசாங்கம் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை திருத்தம் மேற்கொள்ளும் என தெரிவித்தார். (நி)

# பேராதனை பூங்காவின் 200 ஆவது ஆண்டை முன்னிட்டு முத்திரை வெளியீடு

(கொழும்பு)

பேராதனை தாவரவியல் பூங்காவின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நான்கு நினைவு முத்திரைகளும் கடித உறையும் வெளியிடப்பட்டது.

சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் ஆலானந்த பேரேரா தலைமையில், நேற்று முன்தினம் மாலை பூங்காவின் கேட்போர் கூடத்தில் நினைவு முத்திரை வெளியிடப்பட்டது. (நி)



Royal Botanic Gardens, Peradeniya

# அப்பியாசப் புத்தகங்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

40 பக்கங்களைக் கொண்ட அப்பியாசப் புத்தகம் ஒன்றின் விலை 65 ரூபாவில் இருந்து 180 ரூபாவாக அதிகரித்துள்ளது. 120 ரூபாவில் இருந்த அப்பியாசப் புத்தகம் 225 ரூபாவாகவும் 75 ரூபாவில் இருந்த அப்பியாசப் புத்தகம் 100 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

இதேவேளை 40 பக்க CR புத்தகத்தின் புதிய விலை 150 ரூபாவில் இருந்து 290 ரூபாவாகவும் 40 பக்கங்கள் கொண்ட வரைபு புத்தகம் 230 ரூபாவாகவும் அதிகரித்துள்ளன. (நி)

# 500 லீற்றர் மண்ணெண்ணெயுடன் இருவர் கைது

(திருமலை)

திருகோணமலை - கிண்ணியாவில் அனுமதியின்றி மண்ணெண்ணெய் கொண்டுசென்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். கல்முனையிலிருந்து கிண்ணியா நோக்கி அனுமதியின்றி லொறியொன்றில் மண்ணெண்ணெய் ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது 500 லீற்றர் மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர். (நி)


## சேவை

யாழ். கண்டி வீதி அரியாலையில் அம்மா முதியோர், நோயாளர் காப்பகம் குறைந்த செலவில் மருத்துவ பராமரிப்பாளரின் சிறந்த சேவைக்கு.

077 712 6860
076 293 8404

(C-1803)



## கண்ணீர் அஞ்சலி

திருமதி. அழகேஸ்வரி செல்வராஜா



எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி. ஜெயந்தி இரத்தினகோபால் அவர்களின் தாயாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை.

பிறப்பு 02.06.1943

இறப்பு 13.09.2022

(12773)


# இராசிபலன்

14.09.2022
ஆவணி 29, புதன்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 1.31 மணிவரை
அச்சுவினி முற்பகல் 10.42 மணிவரை
சுபநேரம் 4.33-6.03 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை
மகாபரணி
சந்திராஷ்டமம் - அத்தம்

வளவன்




தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு.




தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.




காரிய அனுகூலமுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




பெற்றோர் மீதான பாசம் கூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.




விருப்பங்கள் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஊர் மாற்றம் இட மாற்றம் என்பன ஏற்படலாம்.




தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பேச்சில் இனிமை தென்படும், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்களால் பலனுண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.




குடும்ப பொறுப்புக்கள் கூடும், பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் கிடைக்கும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டின் மகத்துவம் உணர்ந்து செயற்படுவீர்கள்.




கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.




செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலட்டை பண்ணை அமைக்கப்பட்டால் மீன்வளங்கள் அழிவடைந்துவிடும்

## ஊர்காவற்றுறை மீனவ சங்கங்களின் சமாசம்

(அராலி)

தீவகத்தில் கடலட்டை பண்ணை அமைக்கப்பட்டால் மீன் வளங்கள் பெரும்பாலும் இல்லாமல் போகும் என்பதுடன் களப்பு கடலை நம்பி தொழில் செய்பவர்கள் பெருமளவில் பாதிப்படைவார்கள் என தெரிவித்த ஊர்காவற்றுறை பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் சி. சிவச்செல்வன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீவகத்தை பொறுத்தவரையில் ஆழ்கடல் மீன்பிடியை விட களப்பு கடலை நம்பி தொழில் செய்கின்றவர்களே அதிகம். இவர்களது வாழ்வாதாரத்தை யாரும் சிந்திப்பதாக தெரியவில்லை.

கடலட்டை வளர்ப்பு என்பது அந்நியச் செலாவணியை ஊக்குவிக்கும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. தீவகப் பகுதிகளில் கடலட்டை பண்ணைகளை உருவாக்குவதற்கான இடங்கள் சீன நாட்டுக்கு வழங்கப்பட்டு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதனால் மீன் வளங்கள் பெரும்பாலும் இல்லாமல் போகும் என்பதுடன் களப்பு கடலை நம்பி தொழில் செய்பவர்கள் பாதிப்படைவார்கள்.

இதனை கடற்றொழில் அமைச்சர் மற்றும் அதிகாரிகள் கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (4)

# சாவகச்சேரியில் தேடப்பட்டவர் மல்லாகம் மன்றில் சரண்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேக நபரொருவர் அண்மையில் வேறொரு வழக்கொன்றின் போது மல்லாகம் நீதிமன்றில் சரணடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதியில் களவு,வழிப்பறி,மோட்டார் சைக்கிள் திருட்டு,வாள்வெட்டு உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு சாவகச்சேரிப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த இளைஞன் ஒருவரே அண்மையில் மல்லாகம் நீதிமன்றில் சரணடைந்துள்ளார்.

குறித்த சந்தேக நபருக்கு எதிரான வழக்கொன்று மல்லாகம் நீதிமன்றில் இடம்பெற்ற போதே குறித்த சந்தேக நபர் சரணடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.(4-30)

# NVQ 3,4 கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணினி வன்பொருள் தொழில் நுட்பவியலாளர் (NVQ-3) கற்கைநெறிக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16 - 25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். இக்கற்கை நெறி முற்றிலும் இலவசம். விண்ணப்ப முடிவுத்திகதி 2022.10.15. விண்ணப்பதாரி க.பொ.த(சா/த) பரீட்சையில் தோற்றியிருக்க வேண்டும்.

இக்கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2383 அல்லது 071 455 3772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு சபையில் யாழ். மாவட்ட முகாமையாளர் ஆர். திருமுருகன் அறிவித்துள்ளார். (4)

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் (NVQ 4)கற்கைநெறிக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கை நெறிகள் மாவட்ட அலுவலகம் மற்றும் மானிப்பாய் பயிற்சி நிலையங்களில் நடைபெறுவுள்ளது.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16 -25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். இக்கற்கை நெறி முற்றிலும் இலவசம். விண்ணப்ப முடிவுத்திகதி 2022.10.15.விண்ணப்பதாரி க.பொ.த(சா/த) பரீட்சையில் ஏதேனும்3 பாடங்களில்திறமை சித்தியுடன் கணிதம் ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த(உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

இக்கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், தொலைபேசி இலக்கம் மற்றும் பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம்அவனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2383 அல்லது 071 455 3772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் ஆர்.திருமுருகன் அறிவித்துள்ளார். (4)

# யாழ். -முல்லை. பேருந்து சேவையை ஏற்படுத்தித் தாருங்கள்

## அரச உத்தியோகத்தர்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

யாழ். மாவட்டத்தில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சென்று கடமையாற்றும் அரச அலுவலர்கள் உரிய நேரத்திற்கு கடமைக்குச் சென்று வர வசதியாக அரச பேருந்து சேவையை ஏற்படுத்தித் தருமாறு குறித்த அரச அலுவலர்கள் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் காதர் மஸ்தானிடம் எழுத்து மூல கோரிக்கை ஒன்றினை விடுத்துள்ளனர்.

குறித்த கோரிக்கை கடிதத்தில்,

காலை 6.15 மணிக்கு யாழில் இருந்து புறப்படும் அரச பேருந்து பரந்தன் ஊடாக முல்லைத்தீவு செல்ல காலை 9.15 மணி ஆகின்றது. இதனால் அரச பணியாளர்கள் பணி இடங்களில் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

அதேவேளை மாலையில் கடமை முடித்து மீண்டும் யாழ்ப்பாணம் திரும்புவதற்கும் முல்லைத்தீவில் இருந்து உரிய அரச போக்குவரத்து சேவைகள் எவையும் இல்லை.இதனால் திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவு வந்து யாழ்ப்பாணம் பயணிக்கும் அரச பேருந்திலேயே பயணிக்க வேண்டியுள்ளது.குறித்த பேருந்தும் அதிக பயணிகளை ஏற்றி வருவதுடன் சில வேளைகளில் முல்லைத்தீவிற்கு வருகை தராத நிலையும் காணப்படுகிறது.

எனவே, எமது இக்கட்டான நிலையைக் கருத்திற்கொண்டு முல்லைத்தீவு நகரில் இருந்து பரந்தன் ஊடாக யாழ். செல்லவும் காலையில் உரிய நேரத்தில் பணிக்குச் செல்லவும் வசதியாக அரச பேருந்து சேவை ஒன்றினை விரைந்து ஏற்படுத்த ஆவன செய்து தாருங்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-30)

### நூலியலாளர் செல்வராஜாவின் நூல் அறிமுகமும் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

நூலியலாளர் என். செல்வராஜாவின் "நூல் தேட்டம் 16", "நூலகவியல் - பெருந்தொகுப்பு", "நான் கண்ட ஈழத்து நூலக ஆளுமைகள்" ஆகிய புத்தகங்களின் அறிமுகமும் வெளியீடும் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி. தெற்கு பிரதேச சபை தவிசாளர் க. தர்ஷன் தலைமையில் இடம்பெற உள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறி சற்குணராஜா, சிறப்பு விருந்தினராக செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறுதிருமுருகன் ஆகியோர்களும் கலந்துகொள்ள உள்ளார்கள். (4-33-18)

# போதைப்பாவனை கூடாரமாக மாறிவரும் நெல்லியடி பேருந்து நிலைய மலசலகூடம்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள மலசலகூடம் பராமரிப்பின்றி, பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுவதனால் பொது மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த பேருந்து நிலையத்திற்கு பேருந்துக்களில் நீண்ட துாரங்களில் இருந்து பலர் வருகை தருகின்றனர். மலசலகூடம் பராமரிப்பின்றி பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளமையால் இயற்கை உபாதைகளுக்கு உள்ளாவோர் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பில் உரிய தரப்பினர் மலசலகூடத்தினை தூய்மையாக பேண நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இரவு வேளைகளில் பேருந்து நிலையத்தில் கூடும் சிலர் அங்கே மது அருந்துதல்,போதைப்பொருள் பாவனை போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதனால் பேருந்து நிலையம் ,அதனைச் சூழவுள்ள பகுதிகள், மலசலகூடங்கள் என்பவற்றில் வெற்று பியர் ரின்கள் , வெற்று மதுப்போத்தல்கள் அவ்விடத்தில் காணப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகளினால் இரவு வேளைகளில் பேருந்துக்களில் வந்து பேருந்து நிலையத்தில் இறங்கும் பெண்கள் உள்ளிட்டவர்கள் அச்சத்துடனேயே இறங்கிச் செல்கின்றனர். எனவே இது தொடர்பிலும் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (4-33-104-60)

### திலீபனின் நினைவுதினம்;

# முன்னணி இளைஞரணியினரின் ஏற்பாட்டில் ஊர்திப்பவனி

(யாழ்ப்பாணம்)

1987ஆம் ஆண்டு இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கெதிராக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த தியாகதீபம் திலீபனின் 35 ஆவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞரணியின் ஏற்பாட்டில் ஊர்திப்பவனி ஒன்று இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசம் இறைமை சுய நிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி, இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி, வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச நீதி ,அரசியல்கைதிகளின் விடுதலை, பயங்கர வாத தடைச்சட்டத்தை நீக்கு, பௌத்த சிங்கள மயமாக்கலை நிறுத்து என்ற தமிழர்களின் அபிலாஷைகளை முன்வைத்தே குறித்த ஊர்திப்பவனியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என இளைஞரணியினர் அறிவித்துள்ளனர். (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து

# வாக்குறுதிக்கு முரணாக செயற்படும் அரசு

## சட்டத்தரணி நுவான் ஜெனிவாவில் தெரிவிப்பு

**(ஜெனிவா) ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கீழ் அர்த்தபூர்வமான மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக சீர்திருத்தங்கள் இடம் பெற வாய்ப்பில்லை என காலி முகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளரான சட்டத்தரணி நுவான் போபகே ஜெனிவாவில் தெரிவித்துள்ளார்.**

ஆர்ப்பாட்டங்களிற்கு எதிரான அரசாங்கத்தின் வன்முறை நடவடிக்கை ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் பொறுப்புக்கூறல்களிற்கான வாய்ப்புகள் குறித்த நம்பிக்கையை பொய்ப்பித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் தன்னையும் போராட்டத்தில் ஈடுபட்ட பலரையும் கைதுசெய்து சர்ச்சைக்குரிய பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்த சம்பவத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை புயன்படுத்தப் போவதில்லை என்ற வாக்குறுதிக்கு முரணாக அரசாங்கம் செயற்பட்டுள்ளது என்றும் சட்டத்தரணி நுவான் போபகே தெரிவித்துள்ளார். மேலும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது எனக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருவதையும் மனித உரிமைகள் பேரவைக்கு அவர் எடுத்துரைத்துள்ளார். (நி)

## காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம்–460) 33 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

எனது இல:- KR/DS/LB/ACQ/1784/599/BH
காணி அமைச்சின் இல:- 03/J/86/D/26

கீழ்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசாங்கம் எடுத்துள்ளதால் இதற்குரிய நட்ட ஈட்டுப்பணம் கீழ்க்கண்டவாறு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் கீழ் குறிப்பிட்டுள்ள வழக்கிலக்கத்தின் கீழ் வைப்பிடப் பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 1292/23 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையினை பார்க்கவும்.

அட்டவணை

| தொடர் இல | பிபியா 1914 ஆம் இலக்க நில அளவை வரைபடத்திலுள்ள காணித்துண்டு | வழக்கு இலக்கம் | ஆரம்ப நட்டஈட்டுத்தொகை |
|---|---|---|---|
| 01 | 11 | Land/175/22 | 3,115,900.00 |

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், காரைநகர்.

(c-4903)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரோகிணி 2
கி.பா:19 சூரி,செவ் 9 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்:AAT (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு:உத்தியோகம்
தொ.இ: B/12939

பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்:விசாகம் 1
கி.பா:19 ½ சூரி 10 செவ் 11 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L முகாமைத்துவ உதவியாளர்
எதிர் பார்ப்பு:வேலையுள்ள பெண் சைவபோசனம் மட்டும்
தொ.இ:B/12940

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா:73 ¼ சூரி , செவ் 11 இல்
தகைமை/தொழில் : BSc(Hons) விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் விவாகரத்து பெற்றவர்
தொ.இ: B/12942

பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம் : மகம் 1
கி.பா:22 ½சூரி 1 செவ் 12இல்
தகைமை/தொழில்:BA பட்டதாரி சமுர்த்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு :அரசதொழில் சைவபோசனம் அசைவமும் ஏற்றுக்கொள்ளப்படும் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12943

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா:10 சூரி 2செவ்7இல்
தகைமை/தொழில்: BBAபட்டதாரி Charted Accountant
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ:G/12951

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்:அவிட்டம் 1
கி.பா:71 சூரி 7செவ் 9இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: B.Eng(Hons)in Software Engineer
எதிர்பார்ப்பு: Software Engineer, Engineer
தொ.இ: G/12955

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: கேட்டை 4
உயரம் : 5'8"
கி.பா: சூரி , செவ் 8 இல்
தகைமை/தொழில்: A/Lதனியார் தொழில்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் அல்லது வெளிநாடு
தொ.இ:G/12956

பிறப்பு:1999 இந்து நட்சத்திரம்: அனுசம் 2
கி.பா: சூரி 4 செவ் 6 இல்
தகைமை/தொழில் :A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/12958

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் மேலதிகமாக சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



# மணிவிழா வாழ்த்தும் பிறந்ததின வாழ்த்துக்களும்

## திரு.இரா.தர்மரத்தினம்

(sp.Tr-Hindu culture, B.A, SLTS-I)

14.09.2022

எமது பாடசாலையில் கடமையாற்றி பாடசாலையின் உயர்ச்சிக்கும் க.பொ.த (சா/த) பரீட்சையில் 100% சித்திகளைப் பெற்றுத் தந்தும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிற்கும் தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்ப்பித்தும் அயராது பணியாற்றி நேற்று 13. 09.2022 செவ்வாய்க்கிழமை ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியருக்கு வாழ்த்துவதோடு அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



### சேவை விபரம்

யா/நெடுந்தீவு மாவிலித்துறை றோ.க.த.க.வி
17.08.1988-31.12.1993
அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை கொட்டகலை
01.01.1994-16.02.1996
நெடுந்தீவு ம.வி (ஆசிரியர், பிரதி அதிபர்)
16.02.1996-14.06.2002
யா/கொழும்புத்துறை இ.ம.வி
20.06.2002-02.01.2003
யா/சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை
03.01.2003-20.07.2010
யா/உயரப்புலம் மெ.மி.த.க.வி
21.07.2010-13.09.2022

(12715)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/உயரப்புலம் மெ.மி த.க வித்தியாலயம்,ஆனைக்கோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிசபெத் மகாராணியின் உடல் எடின்பரோவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது



(லண்டன்)

பிரித்தானிய மகாராணி எலிசபெத்தின் உடல் ஸ்கொட்லாந்தில் இருந்து எடின்பரோ நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டது. வழியெங்கும் பொதுமக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்நிலையில் மகாராணி எலிசபெத் உடல், "ஓக்" மரத்தில் செய்யப்பட்ட சவப்பெட்டியில் வைக்கப்பட்டு அவருக்கு பிடித்தமான பால்மோரல் கோட்டையில் இருந்து கறுப்பு நிற காரில் புறப்பட்டது.

பால்மோரல் கோட்டையில் இருந்து அந்த கார் 175 மைல் தொலைவில் உள்ள ஸ்கொட்லாந்து தலைநகரான எடின்பரோ நகருக்கு 6 மணிநேர பயணத்துக்குப் பின்னர் போய்ச் சேர்ந்தது.

வழியெங்கும் பொது மக்கள் பல்லாயிரக்கணக்கில் வரிசையில் அமைதியாக நின்று காரில் வைக்கப்பட்டிருந்த மகாராணியின் உடலுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். (நி)

# மகாராணியின் இறுதிச் சடங்கிற்கு 6 பில்லியன் பவுண்டுகள் செலவு

## பொருளாதார நிபுணர்கள் தகவல்

(லண்டன்)

பிரித்தானிய மகாராணி எலிசபெத் காலமான நிலையில், அவரது இறுதிச் சடங்குகளுக்கும் அதன்பின் நடைபெற உள்ள நிர்வாக மாற்றங்களுக்கும் செலவாக உள்ள தொகையின் விபரங்கள் வெளியாகி திகைப்பை ஏற்படுத்தியுள்ளது.


இங்கிலாந்து மகாராணி இரண்டாம் எலிசபெத் மறைவைத் தொடர்ந்து, பிரித்தானியாவில் நிர்வாக ரீதியாக சில கட்டாயமான மாற்றங்களைச் செய்ய பல பில்லியன் பவுண்டுகள் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரித்தானியாவின் புதிய மன்னராக மூன்றாம் சார்லஸின் முடிசூட்டு விழா மற்றும் எதிர்வரும் 19 ஆம் திகதி இறந்த மகாராணி எலிசபெத்தின் இறுதிச் சடங்குகளுக்கு என 6 பில்லியன் பவுண்டுகள் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

ஆனால், நிர்வாக ரீதியான மாற்றங்களுக்காக செலவழிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படும் தொகையுடன் ஒப்பிடுகையில் இந்தத் தொகை ஒன்றும் பெரிது இல்லை என, பிரித்தானிய பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

# புதிய பாராளுமன்ற கட்டிடத்திற்கு அம்பேத்கர் பெயரை சூட்ட வேண்டும்

## தெலுங்கானா சட்டபையில் தீர்மானம்



(டில்லி)

புதிய பாராளுமன்ற கட்டிடத்திற்கு பி.ஆர்.அம்பேத்கர் பெயரை வைக்க மத்திய அரசை வலியுறுத்தி இன்று தெலுங்கானா மாநில சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக அந்த தீர்மானத்தை முன்மொழிந்த மாநில தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் கே.டி.ராமராவ், அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கிய அம்பேத்கரின் பெயரை புதிய பாராளுமன்ற கட்டிடத்திற்கு சூட்டுவது பொருத்தமாக இருக்கும் என அவர் தெரிவித்தார். (நி)

# 6,000 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை மீட்டெடுத்துள்ளதாக உக்ரைனிய ஜனாதிபதி அறிவிப்பு

(கீவ்)

படையினரின் எதிர்த் தாக்குதல் தொடர்வதால் ரஷ்யாவிடமிருந்து இன்னும் அதிகமான நிலப்பரப்பை மீண்டும் தாம் கைப்பற்றியுள்ளதாக உக்ரைனிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கிழக்கு மற்றும் தெற்கில் ரஷ்யக் கட்டுப்பாட்டில் இருந்து உக்ரைனியப் படையினர் 6,000 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை மீள கைப்பற்றியுள்ளதாக அவர் தெரிவித்தார்.



கார்கிவ் பிராந்தியத்தில் முக்கிய நகரங்களை இழந்ததை ரஷ்யா ஒப்புக்கொண்டுள்ள நிலையில் ஏழு மாத கால யுத்தத்தில் மொஸ்கோவின் மோசமான தோல்வியாக இது கருதப்படுகின்றது.

மேலும் பலர் கைதிகளாக பிடிபட்டுள்ளதாகவும் அவர்களை ரஷ்யப் படையால் முன்னர் கைது செய்யப்பட்ட உக்ரைனிய வீரர்களுக்கு பதிலாக மாற்றப்படுவார்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை எதிர்த்தாக்குதல் நடத்தப்பட்டபோதும் உக்ரைனியப் படைகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் அண்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார். (நி)

# பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் இந்தியாவிற்கு விஜயம்



(பாரிஸ்)

பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் கேத்தரின் கொலோனா 3 நாட்கள் அரசு முறை பயணமாக இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் இருதரப்பு உறவு, பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

கேத்தரினின் வருகை வர்த்தகம், பாதுகாப்பு, கால நிலை, கல்வி மற்றும் சுகாதாரத்துறைகளில் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்தும் என இந்திய வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# மகாராணியின் இறுதிச் சடங்கிற்கு ட்ரம்பிற்கு அழைப்பில்லையாம்

(வோஷிங்டன்)

லண்டனில் அடுத்த வாரம் இடம்பெறவுள்ள 2 ஆம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதை வெள்ளை மாளிகை உறுதி செய்துள்ளது.

பாரம்பரியத்திலிருந்து விலகி, மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படாது.

மாறாக, தற்போதைய நாட்டுத் தலைவர்கள் மற்றும் அவர்களது பாரியார் அல்லது இணைந்து வாழ்பவருக்கு மட்டுமே இந்த கௌரவம் வழங்கப்படும் என அமெரிக்காவை தளமாகக் கொண்ட செய்தி இணையத் தளமான [illegible] தெரிவித்துள்ளது.



மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்கான அழைப்பை அமெரிக்க ஜனாதிபதி பைடன் ஏற்றுக்கொண்டதாக வெள்ளை மாளிகை கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது. ஆனால் இந்த அழைப்பு "ஜனாதிபதி மற்றும் முதல் பெண்மணிக்கு மட்டுமே" வழங்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 19 ஆம் திகதி வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

மகாராணி எலிசபெத்தின் அரச இறுதிச் சடங்கில் உலகெங்கிலும் உள்ள ஜனாதிபதிகள், பிரதமர்கள், மன்னர்கள் மற்றும் ராணிகள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


இதே தேவாலயத்தில் தான் மகாராணி எலிசபெத்தின் அதிகாரபூர்வ முடிசூட்டு விழா 1953 ஆம் ஆண்டு நடைபெற்றதாக யுஎஸ்ஏ டுடே செய்தி வெளியிட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஆதொண்டை/காற்றோட்டி

Botanical Name- Capparis zeylanica
Family- Capparidaceae






டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


நிறைய கிளையுடைய பெருஞ்செடி இனத்தைச் சேர்ந்தது. தனியிலை, ஒன்று விட்ட இலையமைப்பைக் கொண்டது. 3.8-10 செ.மீ நீளமானது. வேலுருவ இலைகளைக் கொண்டது. இருபாலான பூக்கள் பெரியவை. பச்சை கலந்த வெண்ணிறம் கொண்டவை. தடித்த உறைகளைக் கொண்ட கோள வடிவ பழங்கள். 5 செ.மீ நீளமானவை. நிறைய விதைகள் பழச்சதையினுள் புதைந்து காணப்படும். மார்கழி, தை மாதத்தில் பூக்களைக் காணலாம். ஆனி, ஆடி மாதங்களில் காய்கள் இருக்கும்.

காற்றோட்டி கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் இதன் பரம்பல் அதிகம். இதனுடைய காய், வேர்கள், இலைகள், வேர்ப்பட்டை அனைத்தும் மருத்துவ குணம்மிக்கவை. காற்றோட்டியால் வாத நோய்கள், மூக்கடைப்பு, வயிற்றுப் புழுக்கள், தொண்டையில் சேரும் சளி, குடைச்சல் தீரும்.

ஆதொண்டையின் காயை வற்றலாக்கி உணவுடன் உண்ணில் கபநோய்கள், உடல்வலி, வயிற்றுப்புழுக்கள் நீங்கும்.

ஆடி மாதத்தில் வரும் அமாவாயையும் இந்துக்களை பொறுத்தவரை விசேட தினமாகும். மேலும் ஆடி அமாவாசை அன்று இந்துக்கள் அனைவரும் தமது உணவில் காற்றோட்டிக் காயை கட்டாயமாகச் சேர்த்துக் கொள்வர். காற்றோட்டிக்காய் என்பது காற்று (வாயு+ஒட்டி) (அகற்றி)+காய் என்று பிரித்து பொருள் கொள்ளப்படலாம்.

அதாவது உடலில் விருத்தி அடைந்துள்ள வாயுவை (வாதத்தை) இது கண்டிக்கும் அல்லது சமப்படுத்தும் என்பது பொருள். எமது மருத்துவ தத்துவப்படி ஆவணி, புரட்டாதி மாதங்களை (கார் காலம்) வாதப்பிரகோப காலமாகக் குறிப்பிடுவர்.

எனவே, ஆடி மாதத்தில் அது படிப்படியாக விருத்தியடைந்து கார் காலத்தில் பிரகோப அடையும் என்பது விதி. இங்ஙனம் பிரகோபமடையும் வாதத்தை சமனப்படுத்துவதில் காற்றோட்டிக் காய் உதவுகிறது. மேலும் இக் காலத்தில் தலையில் நீர் கோர்த்துக் கொள்ளுதல் (Sinusitis) பீனிசம் போன்ற நோய்கள் ஏற்படாமலும் காற்றோட்டிக்காய் தடுக்கிறது.

எனவே, ஆடி அமாவாசை மட்டுமன்றி தொடர்ந்தும் காற்றோட்டிக்காயை பயன்படுத்தி வருவதே உகந்ததாகும். கிடைக்கும் காலங்களில் அதைச் சிறு சீவல்களாக வெட்டிக் காய வைத்து வற்றலாகவும் உபயோகிப்பர்.

**காற்றோட்டி பற்றி,**

"மண்டைக் குடைச்சலறும் வாதத்தின் பீனிசம் போம் தொண்டைக் கபமுந் தொலையுங்காண்-மிண்டு செய்யும் வாதக் கடுப்பகலு மாதே! ஆதொண்டைக்குப் போதப் பல பிணி போம் போம்."

காற்றோட்டி வேர்கள் சேகரித்து 70 கிராம் அளவு எடுத்து கழுவி சிறுகச் சிறுக வெட்டி பச்சைப்பசுப்பால் சிறிது விட்டு கற்கமாக அரைத்து 700 மில்லி தேங்காய் எண்ணெயில் இட்டு காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து தலைக்கு வைத்து முழுகி வர மூக்கடைப்பு, தொண்டைக்கட்டு, வாதக் குடைச்சல், மண்டைக் குடைச்சல் தீரும்.

இதன் வேர்ப்பட்டை 35 கிராம் எடுத்து இடித்து 700 மில்லி நீரிலிட்டு காய்ச்சி 1/3 பங்காக வற்றக் காய்ச்சி 50 மில்லி அளவு 3 நேரம் கொடுக்க மார்புச்சளி நீங்கும்.

முழங்கால் வாதத்திற்கு காற்றோட்டி இலைகளைச் சேகரித்து நன்கு கழுவி துவைத்து எடுத்த நீரில் செங்கல்லை காய்ச்சி அதில் இட்டு எடுத்த பின்பு பிழிந்த காற்றோட்டி இலைச்சக்கையை துவைத்து முழங்காலில் ஏற்படும் வலி, வீக்கத்துக்கு பத்துப் போல் (Poultice) கட்ட முழங்கால் வாதம் போகும்.

வாதமடக்கி, காற்றோட்டி இலை, வேர் இவற்றை ஒவ்வொன்றும் 5 கிராம் எடுத்து இடித்து தேங்காய் எண்ணெய் 350 மில்லியில் இட்டுக்காய்ச்சி பதத்தில் வடித்து முழங்கால் வாதத்திற்கு பூசி வர வலி, வீக்கம் தனியும்.

# கறுப்பிலையான் பண்ணை

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

கோழிவளர்ப்பில் ஈடுபடுபவர்களுக்கு அவற்றுக்கான தீவனத்தை வாங்குவதில் தற்போதயை விலைஉயர்வு பிரச்சினையாகவே உள்ளது. விலையதிகரிப்புக்கு மேலாக அவற்றிலிருந்து பெறப்படும் முட்டை மற்றும் இறைச்சி என்பனவற்றை விலையதிகரித்தே விற்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு. உற்பத்தியாளருக்கு இந்த விலையதிகரிப்பு உற்பத்திபொருட்களை விலையதிகரித்து விற்க வேண்டிய கட்டாயத்திலும் இவர்களுடன் பொருட்களை வாங்கி விற்பவர்களுக்கும் இந்த இடர்பாடு மனத்தாக்கத்தை ஏற்படுத்தியே இருக்கின்றது. இவற்றை வாங்க வரும் பொதுமக்கள் விற்பவர்களை குறைசொல்வதிலேயே கருத்தாக இருப்பதனால் இந்த சந்தைப்படுத்தல் முறைமை பெருத்த பெருமூச்சுக்களுடனேயே நடைபெறுகின்றதென்பதனை அனைவரும் அவதானித்திருப்பீர்கள். தவிர்க்க முடியாத நிலைமையென்றாலும் உற்பத்தியின் விலை தீவனத்திலேயே முழுக்க முழுக்க தங்கியிருப்பதனால் அதனது விலையை குறைப்பதற்கான முயற்சியிது. வாருங்கள் இந்த கறுப்பிலையான் பண்ணையை (Black soldier fly farm) உருவாக்குவது பற்றி இதில் சுருக்கமாக விளக்க முயற்சிக்கின்றேன். எதுவும் அனுபவத்தின் மூலமான செய்கை என்பதனால் முயற்சி செய்து தான் பாருங்களேன். இதற்குள் பல விடயங்கள் பொதிந்திருக்கின்றன.

கறுப்பிலையான் [Hermetia illucens] எமது பிரதேசத்தில் அழுகலான சேதனப்பொருட்களில் இயற்கையாகவே தொற்றுதலாகி அவற்றில் பல்கிப்பெருகும் ஆற்றலுள்ளது. தாவரக் கழிவுகளாயினும் சரி விலங்குக் கழிவுகளாயினும் சரி இவ்விலையான் அவற்றில் முட்டையிட்டு அவற்றிலிருந்து வெளிவரும் புழுக்கள் அளவு சிறிதாக ஆரம்பத்தில் காணப்படும். பின்னர் அவை கழிவுகளை உண்ணத்தொடங்கி தமது உடல் பருமனை அதிகரித்துக் கொள்ளும். இவ்வாறு பல்வேறு அளவுகளில் வளரும் புழுக்களை வயது அடிப்படையில் கோழிகளுக்கு உணவாக கொடுப்பதற்கு குறிப்பாக கோழிக்குஞ்சுகளுக்கு வழங்குவதற்கு சிறந்ததாக இருக்கும்.




முட்டை பொரித்து வெளிவரும் புழுக்கள் ஆரம்பத்தில் சிறிய உணவுத் துணிக்கைகளை உண்ண ஆரம்பிப்பதனால் அரிசித்தவிட்டினை தூவிவிடுவது நல்லது. இலகுவாக அரிசித்தவிட்டை உண்டு வளரும் புழுக்கள் பின்னர் சேதனக் கழிவுகளில் உண்ணத் தொடங்கிவிடும்.

**சேதனக்கழிவுகள் பலவிதம்**

எமது பிரதேசத்தில் உருவாகும் சேதனக்கழிவுகளில் பலவிதங்களுண்டு. இவற்றை நாம் இலகுவாக கறுப்பிலையானை விருத்தி செய்வதற்கும் அதனது புழுக்களை பல்வேறு அளவுகளில் அதிகமாக வளரச் செய்து கோழிகளுக்கு உணவாக பயன்படுத்திக் கொள்ளலாம். இங்கே சேதனக் கழிவுகள் அழுகலடையத் தொடங்கும் போதுதான் இந்த கறுப்பிலையான் அதில் முட்டையிடத் தொடங்கும். ஆதலினால் அழுகலடையும் வரையும் வேறு பூச்சிகள் மொய்க்கத் தொடங்குவதால் இக்கழிவுகளினுள் இவ்விலையானின் புழுக்கள் சிலவற்றை விடும்போது மற்றைய பூச்சிகளின் பெருக்கம் குறைவடைந்து விடும். மேலும் உயிரியல் துறையில் செய்த ஆய்வில் கறுப்பிலையானின் புழுக்கள் பெருகப் பெருக ஏனைய பூச்சிகளின் பெருக்கம் மற்றும் மொய்த்தல் என்பன குறைவடைந்து இறுதியில் இப்புழுக்களே அதிகமாக பெருகிக் காணப்படும். புழுக்களை பட்டர் அல்லது மென்மஞ்சள் நிறமான குடம்பி பருவத்திலேயே கோழிகளுக்கு வழங்க வேண்டும். அவை வளர்ந்து கறுத்த கூட்டுப்புழுவாக மாறினால் அதனைக் கோழிகள் உணவாகக் கொள்ளாது. ஏனெனில் அவற்றின் தோல் கடினமானதாக மாறி கோழிகளால் உண்ண முடியாததுடன் கூட்டுப் புழுவில் உருமாற்றம் நிகழ்ந்து நிறைவுடலியான இலையான் உருவாதல் நிகழ்வ தனாலாகும். குஞ்சுகளுக்கு சிறிய புழுக்களையும் பின்னர் கோழிக் குஞ்சுகளின் வயதிற்கேற்ப புழுக்களை தெரிவு செய்து வழங்கலாம்.

**கறுப்பிலையான் புழுக்களிலுள்ள ஊட்டச்சத்து**

கறுப்பிலையான் புழுக்களை காயவைத்து நிறுத்தெடுத்தால் அதில் 50 சத வீதமான புரதமும் 35 சதவீதமான கொழுப்பும் நிறைந்திருக்கின்றன. இவை தவிர தேவையான அமினோ அமிலங்களும் காணப்படுவது மிகவும் சிறப்புக்குரியது. இதனை கோழிகள், பன்றி மற்றும் மீன்கள் குறிப்பாக இறால் வளர்ப்புக்கும் தீவனமாக பயன்படுத்தக்கூடியதாகும். வெளிநாடுகளில் குறிப்பாக அண்டை நாடான இந்தியாவில் இவ்வாறான கறுப்பிலையான் பண்ணைகள் பல உருவாக்கப்பட்டு இதனது புழுக்களை அப்படியே உணவாகவும் அவற்றை காய வைத்து அரைத்து தீவனத்திற்கேற்ற சிறு கட்டிகளாகவும் உருமாற்றி வழங்க முடியும். இது ஒரு சிறுதொழில் முயற்சி. கறுப்பிலையானை வளர்ப்பது மற்றும் அதனை உணவாக குறிப்பாக கோழிகளுக்கு உகந்த தீவனமாக மாற்றுவதனை பெருதொழில் முயற்சியாகவும் மாற்றலாம்.

எம்மூரில் கிடைக்கும் சேதனக் கழிவுகள் குறிப்பாக பழத்தொழிற்சாலையில் வெளிவரும் கழிவுகள், இறைச்சிக் கடையில், மீன் சந்தையில் வெளிவரும் கழிவுகளிலும் இதனை இலகுவில் வளர்க்கலாம். சேதனக் கழிவுகள் அழுகத்தொடங்கும் போது இவ்விலையான் வந்து முட்டையிடுவதனால் இவ்விலையானினால் எமக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. முயற்சி செய்தால் பலனை நிச்சயம் அனுபவிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு போதியளவு பொலிஸார் இல்லை

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் மிகவும் குறைந்த அளவில் கடமையாற்றி வருகின்றனர். இந்நிலையில் போதியளவு பொலிஸாரை கடமையில் ஈடுபடுவதற்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட பொலிஸ்மா அதிபருக்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் குறைவாக இருப்பதனால் முறைப்பாடு செய்வதில் தாமதம், சமூகசீர்கேடுகள், தகவல் கொடுத்தாலும் பொலிஸார் வருவதில் தாமதம் மற்றும் ஆலயங்களிலும் வீடுகளிலும் தொடர்ந்து களவுகள் இடம்பெறுவது அதிகரிக்கின்றன என பொதுமக்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர். எனவே உடடியாக நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு போதியளவு பொலிஸாரை அனுப்பி வைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-60)

# விடுதியில் தீப்பரவல் உடைமைகள் தீக்கிரை



(வவுனியா)

வவுனியா மன்னார் வீதி 4 ஆம் கட்டை பகுதியில் வீதி அபிவிருத்தி பணியில் ஈடுபடும் ஊழியர்கள் தங்கியிருந்த விடுதியில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக விடுதி முற்றாக சேதமடைந்துள்ளது.

தீ விபத்துக்கான காரணம் தொடர்பிலான் மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மேலும் குறித்த விடுதியில் 30 ஊழியர்கள் தங்கியிருப்பதுடன் அவர்கள் விடுமுறையில் சென்றுள்ளமையினால் எவ்வித உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை என்பதுடன் உடைமைகள் மட்டுமே தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன. (4-250-299)

# அரச நலத்திட்ட உதவி பெறுவோரை பதிவு செய்யுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரச நலத்திட்ட உதவிகளை பெறுபவர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வடமராட்சிவடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகம் கோரிக்கை விடுத்தள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான அரச நலன்புரி நன்மைகள் சபையின் நலத்திட்ட உதவித் தொகைகளைப் பெறுவதற்கு தகுதியான நபர்களை அடையாளம் காணும் பொருட்டே அவர்களை பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கத்தைக் கொண்ட நலன்புரி நன்மைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக சகல நலன்புரி நிவாரண நன்மைக் கொடுப்பனவின் பொருட்டு தகுதியான நபர்களை அடையாளம் காணுவதற்காக புதிய வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் நீங்கள் ஏற்கனவே பயனடைந்து கொண்டிருந்தால் அல்லது அரசு செயற்படுத்தும் சமுர்த்திக் கொடுப்பனவு, முதியோர் கொடுப்பனவு, மாற்றுவலுவுள்ளோர் கொடுப்பனவு, சிறுநீரகநோய்க் கொடுப்பனவு, பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு போன்ற ஏதேனும் ஒரு நலத்திட்டத்தின் கீழ் பயனடைய தகுதியுடையவராயின் விண்ணப்பப்படிவத்தை முழுமையாக பூரணப்படுத்தி தங்களுடைய கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோ கத்தர், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்தி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவத்தினை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் கிராம உத்தி யோகத்தரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என வடமராட்சிவடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (4)

# மைதானத்தில் வன்முறை 8 பேர் பொலிஸாரால் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கைகலப்பின் போது 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது வட மாகாணத்திற்கான கபடி போட்டி கிளி.மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது திடீரென அங்கு வன்முறைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதன்போது இருவர் காயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் எட்டுப் பேரை கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-316)

# ஆவணங்கள் திருட்டு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நீண்ட காலமாக மனித உரிமைகள் சார்ந்து பணியாற்றி வரும் "மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையம்" நிறுவனத்தின் அலுவலகம் கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டு முக்கிய ஆவணங்கள் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ். திலீபன் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த அலுவலக சிசிரிவி கமராக் காட்சிகளை ஆராய்ந்த போது இரண்டு நபர்கள் அலுவலகத்தில் இருந்த மேசை இலாச்சிகளில் ஆவணங்களை தேடுவதும் கதவுகளை திறப்பதும் பதிவாகியுள்ளது.

ஆனால் பெறுமதிமிக்க மடிக்கணினி, கணினிகள் மற்றும் பெறுமதிக்க பொருட்கள் இருந்தும் அவைகள் எதுவும் எடுத்துச் செல்லப்படவில்லை.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-285)

# அலிசப்ரியின் கருத்திற்கு உறவுகள் கடும் கண்டனம்

## சர்வதேச விசாரணை தேவை எனவும் வலியுறுத்து

(முல்லைத்தீவு)

ஜெனிவாவில் நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமான நிலையில் அங்கு கருத்துத் தெரிவித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியின் கருத்துக்கு கடும் கண்டனம் வெளியிட்டுள்ளதோடு தமக்கு சர்வதேச விசாரணையே தேவை எனவும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களின் உறவுகள் சங்கத் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி மற்றும் செயலாளர் பிரபாகரன் றஞ்சனா ஆகியோர் நேற்று முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும்கருத்து தெரிவிக்கையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமான நிலையில் அங்கு இலங்கை தொடர்பான விடயத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது விடயம் தொடர்பில் சர்வதேச விசாரணையை தொடர்ச்சியாக கோரிவரும் எமக்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி எந்த விடயமும் முன்வைக்கப்படாமையானது கவலையளிக்கிறது. இதேவேளை இந்த கூட்டத்தொடரில் சர்வதேச விசாரண்ண தொடர்பான தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும் என வலியுறுத்துக்கிறோம் என தெரிவித்துள்ளணர். (4-281)

# விபத்து; ஒருவர் படுகாயம்

(நெளுக்குளம்)

வவுனியா காமினி பாடசாலைக்கு முன்பாக ஏற்பட்ட விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா பூங்கா வீதியில் இருந்து வவுனியா நகர் நோக்கிச் செல்ல முற்பட்ட பிக்கப் ரக வாகனம் ஒன்று வவுனியா நகரிலிருந்து குருமன்காட்டுப் பகுதி நோக்கி மன்னார் பிரதான வீதி யில் பயணித்து கொண்டிருந்த, மோட்டார் சைக்கிளுடன் மோதியதிலேயே இவ் விபத்து இடம் பெற்றது.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-299)

# 6 இந்திய மீனவர்களை விடுவித்தது மன்.நீதிமன்றம்

(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பில் சர்வதேச கடல் எல்லைக் கோடு ஊடாக இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் கடந்த மாதம் 27 ஆம் திகதி 6 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த மீன வர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த ஆறு மீனவர்களுக்கும் 3 வருட சிறைத் தண்டனை 10 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டு [illegible] நீதவான் [illegible] மேலும் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி படகு உரிமையாளர்களுக்கான வழங்கு விசாரணை இடம் பெறும்.

அன்றைய தினம் படகு உரிமையாளர் மன்றில் சமூகமளிக்காவிட்டால் படகு அரசுடமையாக்கப்படும் என நீதிவான் தெரிவித்தார். மேலும் விடுதலை செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலக அதிகாரிகள் ஊடாக மிகிரியாகம முகாமிற்கு அனுப்பி நாட்டிற்கு அனுப்ப உத்தரவிட்டார். (4-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 99

### ஆசிரியர் கண்டிக்காத மாணவனை நீதிமன்றம் தண்டிக்கும்



ஒரு பையன் 8 ஆம் வகுப்பு படிக்கும்போது... சிகரெட் பிடிக்கப் பழகினான்...

பதினொன்றாம் வகுப்பிலேயே மது அருந்தப் பழகினான்.

தட்டுத் தடுமாறி கல்லூரிக்கு வந்தான். அங்கு சீட்டாடவும் பெண்கள் தொடர்பையும் கற்றுக் கொண்டான்.

அத்தனைக்கும் பணம் நிறைய தேவைப்பட்டதால்... பொய் சொல்லவும் திருடவும் ஆரம்பித்தான்.

இறுதியில் கொலைகாரனாகவும் ஆனான்... கைது செய்யப்பட்டு மூன்றாண்டுகள் கீழ்க்கோர்ட், மேல்கோர்ட் என வழக்கு நடந்து... இறுதியாக... தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

அனைத்து அப்பீல்களும் நிராகரிக்கப்பட்டு தூக்கிற்கான நாளும் குறிக்கப்பட்டது..

தூக்கிற்கு முன்தினம் "கடைசி ஆசை கேட்கப்பட்டது."

பெற்றோரை சந்திக்க விரும்பினான். பெற்றோரும் வந்தனர். கதறினர்..... பொலிஸ், வக்கீல், நீதிபதி, சாட்சிகள் எல்லோரும் சதி செய்து அவனைத் தூக்குக்கு அனுப்பி விட்டதாக அழுது புலம்பினர்.

மகன் அமைதியாகச் சொன்னான். அவர்கள் காரணமில்லை,...

நீங்கள்தான் "நான் ஐந்தாம் வகுப்பில் தவறு செய்தபோது ஆசிரியர் என்னை கண்டித்து அடித்தார்.

வீட்டில் அதை நான் சொன்னதும் நீங்கள் உறவினர்கள், நண்பர்களை கூட்டிக் கொண்டு பள்ளிக்கு வந்து ஆசிரியரையும் தடுத்த மற்ற ஆசிரியர்களையும்.... அடித்து மிரட்டி... பொலிஸிலும் புகார் கொடுத்தீர்கள்.

அதிலிருந்து ஆரம்பித்த வீழ்ச்சிதான் ..... தூக்கு மேடை வரை வந்திருக்கிறது எனது தூக்குக்கு நீங்கள்தான் காரணம் என அழுதபடியே சொன்னான்...

ஆசிரியர் கண்டிக்காத மாணவனை நாளை பொலிஸ் மற்றும் நீதிமன்றமும் தண்டிக்கும். இதை பெற்றோர் உணரவேண்டும்.

பரிவும் பாசமும்..... பிள்ளைகளின் பண்பையும் வாழ்க்கையையும் சீரழிக்கும் விதமாக மாறிவிட அல்ல என்பதை பெற்றோர் புரிந்து கொண்டால் இளைய சமுதாயம் சீராகும் என்பது காலத்தின் கட்டாயம்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# எரிபொருள் கப்பல்களுக்கான தாமதக் கட்டணம் 432 மில்லியன் டொலர்



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் எரிபொருள் கப்பல்களுக்கான தாமதக் கட்டணம் 432 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு துறைமுகத்தில் பெற்றோல், டீசல் உள்ளிட்ட மூன்று எரிபொருள் கப்பல்கள் சில நாட்களாக தரித்து நிற்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல்களுக்கு செலுத்தக் கையிருப்பில் போதியளவு டொலர்கள் இல்லாத காரணத்தினால் அந்தக் கப்பல்களில் இருந்து எரிபொருள் இறக்கப்படவில்லை.

பெருந்தொகை எரிபொருட்களுடன் இந்த மூன்று கப்பல்களும் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டு காத்திருப்பதாக பெற்றோலிய வளக் கூட்டுத்தாபன உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

டொலர்கள் கையிருப்பில் இல்லாத காரணத்தினால் எரிபொருள் கப்பல்களுக்கு பெருந்தொகை தாமதக் கட்டணங்களை செலுத்த நேரிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அதிக விலைக்கு முட்டை விற்பனை

## 80 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்


(கொழும்பு)

அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த 80 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

50 ரூபாவுக்கு அதிகமாக முட்டையை விற்பனை செய்வோரை கைது செய்வதற்கான சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் ஷாந்த நிரிஎல்ல தெரிவித்துள்ளார்.

அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்பவர்களை தேடி சுற்றிவளைப்புகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென அவர் மேலும் தெரி வித்துள்ளார். (நி)

# 11 நாட்களில் 10 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள்



(கொழும்பு)

செப்டெம்பர் மாதத்தின் முதல் 11 நாட்களில் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை 10 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது நாட்டிற்கு வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கையில் நிலையான அதிகரிப்பைக் குறிக்கிறது என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தற்காலிகத் தரவுகளின்படி செப்டெம்பர் 1 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மொத்தம் 10 ஆயிரத்து 796 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இதனையடுத்து ஆண்டுக்கான மொத்த வருகைகள் 5 இலட்சத்து 7 ஆயிரத்து 226 ஐ எட்டியுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட காலத்திற்கான தினசரி வருகை விகிதம் ஒரு நாளுக்கு 979 சுற்றுலாப் பயணிகளாகும் என்றும் அந்தச் சபை தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் இந்தியா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியாவில் இருந்தே அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். (நி)

# பேக்கரி தொழில் வீழ்ச்சி

## வெளிநாடு செல்லும் பணியாளர்கள்



(கொழும்பு)

இலங்கையில் கோதுமை மாவிற்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக பேக்கரி தொழில் கடுமையாக வீழ்ச்சி கண்டுள்ளதுடன் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன.

மாவுக்குத் தட்டுப்பாடு, பேக்கரி தொழில் வீழ்ச்சி காரணமாக இந்த தொழிலில் ஈடுபட்டுள்ள பலர் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்றுள்ளதாக அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## மனிதப் பிசாசுகள்



(நேற்றைய தொடர்ச்சி)

நாளைக்கு நீங்கள் என் கூட வாருங்கள். ஒரு அதிசயத்தைப் பார்க்கலாம் என்றான். அது கேட்டு சிலர் " ஐயோ! பிசாசுகள் திரியும் இடத்திற்கா? நாங்கள் வர மாட்டோம்" என்று பயந்து கொண்டே கூறினார்கள். ஆனால்,ஐந்தாறு இளைஞர்கள் அவனோடு வருவதாக துணிச்சலுடன் கூறினார்கள்.

பார்த்திபன் அவர்களை அழைத்துக்கொண்டு உச்சி வேளைக்கு அந்த ஆலமரத்தடிக்குச் சென்றான். அவர்களிடம் "இது வரை நீங்கள் பிசாசுகள் என்று எண்ணியவை எல்லாம் திருடர்களே. அவர்கள் மொத்தம் 15 பேர்கள். இதுவரை இவர்கள் வெள்ளைத் துணியை கோலில் கட்டி உயரத்தூக்கி ஆட்டியும் பயங்கரமாகக் கத்தியும் நெருப்பை மூட்டியும் இங்கு கொல்லி வாய் பிசாசுகள் நடமாடுவதாக உங்களை எல்லாம் நம்ப வைத்திருக்கிறார்கள். அவர்கள் திருடர்கள் தாம் திருடியவற்றை இங்கு ஒளித்து வைக்கவே இந்த பிசாசு நாடகம் ஆடுகிறார்கள்" என்று கூறிச் சிறிய பாறையைக் காட்டினான்.

அவர்களிடம் அவன் "இதை நகர்த்தி அந்த இடத்தில் நாம் தோண்டினால் நமக்கு அவர்கள் திருடிக்கொண்டு வந்த பொருட்கள் எல்லாம் கிடைக்கும்" என்றான். எல்லோரும் பாறையை நகர்த்தி விட்டு குழி தோண்டினார்கள். அக் குழியிலிருந்து அவர்களுக்கு நூறு மூட்டைகளுக்கு மேல் கிடைத்தன. அவற்றை எல்லாம் எடுத்துக் கொள்ளச் சொல்லி பார்த்திபன் தானும் சிலவற்றை சுமந்துகொண்டு அவர்களோடு தன் கிராமத்தை அடைந்தான்.

ஊராரிடம் அவன் எல்லாவற்றையும் விபரமாகக் கூறி "இந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக நம்மை பயமுறுத்தி வந்த இந்த திருடர்களைப் பிடிப்பதோடு அவர்கள் திருடிய இப்பொருட்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்து ஏதாவது பரிசு பெறலாம். இதற்குப் பின் அப்பகுதியை முன்போலாக்கி பயிரிட்டு சுகமாக இருப்போம்" என்றான்.

அன்று நள்ளிரவுக்கு மேல் திருடர்கள் வந்து பாறையை நகர்த்தி குழி தோண்டியபோது அதில் தாம் வைத்த பொருட்கள் எதுவுமே இல்லாதது கண்டு திகைத்து நின்றார்கள். அப்போது அவர்களை பார்த்திபனும் அவனது ஊராரும் சூழ்ந்து கொண்டு தடிகளால் அடித்து கட்டி இழுத்து மன்னன் முன் கொண்டு போய் நிறுத்தினார்கள். மன்னனும் பலநாட்களாகத் தேடப்பட்ட அத்திருடர்கள் கிடைத்தது கண்டு மகிழ்ந்தான். பார்த்திபனின் செயலைப் பாராட்டி அவனுக்கு நிறையப்பரி சளித்தான். அக்கிரா மத்தவருக்கும் உடனடியாக தம் பசி தீர்த்துக் கொள்ள ஐந்து வண்டி தானியம் கொடுத்தான். அதன்பின் ராஜபுரிக் காரார்கள் தம் ஊரில் வடபுற நிலத்தைப் பயன் படுத்தி உழுது பயிரிட்டு சுகவாழ்வு வாழ்ந்தார். (முற்றும்)

# சிலப்பதிகாரம்

## கூடல் நகரின் காட்சிகள்



கோவலன் புறநகரிலிருந்து மதுரை நகருக்கள் புகும் வாயிலை அடைந்தான்.

நகரைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டிருந்தது. கோட்டை வாசலில் அகழி அமைத்து பக்கவாட்டில் யானைகள் சென்று வருவதற்காக ஒரு வழி உருவாக்கப்பட்டிருந்தது.

ஆனால், அங்கே கொலைவாளுடன் ஒரு காவல்காரன் நின்றிருந்தான். அவனைப் பார்க்கிறவர்களுக்கு நிச்சயம் பயம் உண்டாகும். பார்வையிலோ நடையிலோ கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டாலும் கேள்வி கேட்காமல் தலையைச் சீவுகிற அதிகாரம் படைத்தவன் என்பது அவன் தோற்றத்திலேயே தெரிந்தது.

கோவலனுக்கும் மனத்துக்குள் பயம்தான். இருந்தாலும் பார்வையிலும் நடையிலும் தன்னம்பிக்கையையை வரவழைத்துக்கொண்டு அவனைக் கடந்து உள்ளே போனான்.

முதலில் பார்த்த தெருவில் மேல்காற்று பலமாக வீசியது. ஆங்காங்கே படர்ந்திருந்த கொடிகளை அசைத்தது.

அருகில் வைகை ஆற்றின் திருமருதத்துறை இருந்தது. அங்கே சில பெண்கள் நீராடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் காதலிக்கும் செல்வந்தர் வீட்டு இளைஞர்கள் கரையிலிருந்து அவர்கள் நீராடியதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதில் அந்தப் பெண்களுக்கு எந்தத் தயக்கமும் இருந்ததாகத் தெரியவில்லை.

அடுத்த வீதியின் அடையாளங்கள் அங்கே வசிப்பவர்கள் யார் என்பதை எடுத்துக் காட்டியது. தெருவில் . மூடிய வண்டிகள், பல்லக்குகள், வீடுகளில் மணியும் முத்தும் இழைத்த கட்டில்கள், பணிப்பெண்கள் நீட்டிய கள்ளை வாங்கிப் பருகும் அழகான பெண்கள். எல்லாவற்றுக்கும் மேலாகத் தங்கத்தால் ஆன வெற்றிலைப் பெட்டிகள்.

ஆம். தாசிகள்தான். ஆனால் பெரும் செல்வந்தர்களுக்கும் அரசரின் அந்தப்புரத்திலும் மட்டுமே கிடைக்கப்பெறும் முதல் நிலைத் தாசிகள். அடுத்தது கூத்தியர்கள் வீதி.

அங்கேயும் செல்வத்துக்குக் குறைவில்லை. வீட்டின் கூரையே ஓடுகளுக்குப் பதில் பொன் தகடுகளால் போடப்பட்டிருந்தன!

அதுமட்டுமா? நாடாளும் அரசர் கூட யாரும் அறியா வண்ணம் தங்குகிற காவல் நிறைந்த சௌகர்யங்கள். கடந்துபோகிற போதே பாட்டும் இசைக் கருவிகளின் ஒலியும் கேட்டன.

அடுத்த வீதி போர் வீரார்கள் அணியும் கவசங்களும் தலையணியும் வாள்களும் குத்துக் கோல்களும் விற்கும் வீதி. அங்கே மதுரையின் வீரம் தெரிந்தது.

அடுத்தது நவரத்தினங்களும் ஆபரங்களும் விற்கும் வீதி ஒளி வீசும் வைரங்களும் மரகதமும் பலவகை ஆபரணங்களும் தங்கமுமாக அங்கே மதுரை மாநகரின் செல்வச் செழிப்பு தெரிந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.
– அலன் தார்ன்ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வார்த்தைகளால் திருத்த முடியுமோ இந்த நயவஞ்சகர் கூட்டத்தை

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் (12) ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது.

இலங்கை தொடர்பில் உரையாற்றிய மனித உரிமைகள் பேரவையின் பதில் ஆணையாளர் நடா அல் நஷிப்;

"இலங்கையில் கடந்த காலங்களில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும்" எனக் கூறியுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர்களின்போது பொறுப்புக்கூறல் பற்றிப் பல தடவைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

இருந்தும் இது தொடர்பில் இலங்கை அரசாங்கம் கால அவகாசத்தைக் கோருவதுடன் அந்த விடயம் அப்படியே விடுபட்டுப் போவது வழமையாயிற்று.

இந்தநிலையில் மனித உரிமைகள் தொடர்பில் எந்தவிதக் கருசனையும் இல்லாத சில நாடுகள், இலங்கை ஆட்சியாளர்களுக்குச் சாதகமாகவும் தமிழ் மக்களுக்கு எதிராகவும் கருத்துரைத்து நிற்பதைப் பார்க்கும்போது நெஞ்சு பொறுக்கவில்லை.

சிறுபான்மை இனம் என்ற ஒரே காரணத்துக்காக, ஆட்சியாளர்களாலும் அரச படைகளாலும் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்ட கொடுமையை கண்டிக்கவும் அதற்குத் தக்க தண்டனை வழங்கவும் முடியவில்லை எனும்போது, இந்த உலகில் எங்ஙனம் மனித உரிமைகளை பாதுகாக்க முடியும்.

ஆம், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் உலக நாடுகள் ஒன்றுகூடி கதைக்கின்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில்; இலங்கை மனித உரிமை மீறல் விடயத்தைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்றும்,

இலங்கையின் இக்கட்டான சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக வைத்து தங்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடாது என்றும் கருத்துரைக்கும் சில நாடுகளைச் சேர்ந்த ஈனப் பிறவிகள் வாழுகின்ற இந்த உலகில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் நீதி கிடைக்கப் போவதில்லை என்பதுதான் நிறுதிட்டமான உண்மை.

ஆம், 2009ஆம் ஆண்டு முற்றுப்பெற்ற வன்னிப் பெரும் போரின்போது கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை.

தவிர, படையினரின் அறிவிப்பை அடுத்து அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன? என்பதைக்கூட அறிய முடியாத அவலநிலை இன்னமும் நீடிக்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், ஆண்டு தோறும் கூடுகின்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் பேரவையின் ஆணையாளர், இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களையும் அது தொடர்பில் நீதி விசாரணை தேவை என்றும் வலியுறுத்துகின்ற போதிலும் இதுவரை இலங்கை ஆட்சியாளர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆக, நயவஞ்சகர்களைக் கொண்ட இந்த நாட்டில் இறைவன் தண்டனை வழங்கினால் மட்டுமன்றி, உரைகளும் ஆலோசனைகளும் எந்தத் தீர்வையும் தரப்போவதில்லை என்பது தான் உண்மை.

## 300 இற்கு மேற்பட்ட பொருட்களின் இறக்குமதியை கட்டுப்படுத்தும்
### வர்த்தமானியில் திருத்தம்

(கொழும்பு)

இலங்கையில் 300 இற்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதிகளுக்கு மறு அறிவித்தல் வரை தற்காலிக தடை விதித்து வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானியில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

300 பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கும் அதி விசேட வர்த்தமானி அறிவிப்பு கடந்த ஆகஸ்ட் 22 ஆம் திகதி வெளியிடப் பட்டது.

இதற்கமைய, 2022 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலை திருத்தியமைத்து புதிய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, புதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வாசனை திரவியங்கள் உள்ளிட்ட சில பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மூலப்பொருள் பற்றாக்குறையால் 10 ஆயிரம் ஹோட்டல்கள் முற்றாக மூடப்பட்டுள்ளது

ரொட்டி மாவு, முட்டை, இறைச்சி மற்றும் மீன் பற்றாக்குறையால் சுமார் 10 ஆயிரம் ஹோட்டல்கள் முற்றாக மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இந்த பற்றாக்குறையால் அரசு நிறுவனங்கள் மற்றும் பள்ளிகளில் உள்ள சிற்றுண்டிச்சாலைகளில் பாதியளவு மூடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரொட்டி மாவு, முட்டை, இறைச்சி மற்றும் மீன் தட்டுப்பாடு காரணமாக பல்வேறு நிகழ்வுகளுக்கான கேட்டரிங் சேவைகளும் கிட்டத்தட்ட நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஜெனிவா சென்றோர் பாதுகாப்பாக நாடு திரும்புவதை உறுதி செய்க
### இலங்கையிடம் சுவிஸ்சர்லாந்து தூதுவர்

(ஜெனிவா)

ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் பேரவை அமர்வில் பங்கேற்று மனித உரிமைகள், அடிப்படை உரிமைகளுக்காக குரல் ,கொடுத்தவர்கள் பாதுகாப்பாக நாடு திரும்புவதற்கு இலங்கை அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என இலங்கைக்கான சுவிஸ்சர்லாந்து உயர்ஸ்தானிகர் டொமினிக் ஃபர்க்லர் வலியுறுத்தியுள்ளார்.

அமைதி வழியில் போராடியவர்கள் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்து மனித உரிமைகள் பேரவையில் சுவிஸ்சர்லாந்து பிரதிநிதி கரிசனை வெளியிட்டார்.

அத்துடன், நல்லிணக்கம், பொறுப்புக்கூறும் கடப்பாடு குறித்தும் 51 ஆவது அமர்வில் நாம் வலியுறுத்தினோம் எனவும் இலங்கைக்கான சுவிஸ்சர்லாந்து உயர்ஸ்தானிகர் டொமினிக் ஃபர்க்லர் தெரிவித்துள்ளார். (ம-7)

## இலங்கைக்கு ஆதரவளிக்குமாறு மாலைதீவு வேண்டுகோள்

(ஜெனிவா)

இலங்கை மக்கள் மத்தியில் ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை ஏற்படுத்துவதற்கு ஆதரவளிக்குமாறு மாலைதீவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜெனிவாவில் மாலைதீவின் தூதுவரும் நிரந்தரப் பிரதிநிதியுமான அசிம் அஹமட் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்தி தொடர்பான சவால்களை அதன் நன்கு நிறுவப்பட்ட ஜனநாயக செயல்முறைகள் மூலம் வெற்றிகொள்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு தமது நாடு எப்போதும் ஆதரவளித்து வருவதாக அவர் சபையின் அமர்வின்போது குறிப்பிட்டார். (ம-7)

## ஐ.நா கூட்டத்தொடருக்காக ஜெனிவா செல்கிறார் சுமந்திரன்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இணை அனுசரணை வழங்கும் நாடுகளின் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அதிபர் சட்டத்தரணி சுமந்திரன் ஜெனிவா செல்கின்றார்.

அமெரிக்கா ஏற்பாடு செய்துள்ள கூட்டமொன்றில் நாளை தான் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிரித்தானியா தலைமையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படவுள்ள பிரேரணை குறித்து சர்வதேச நாடுகளுடன் கலந்துரையாடலொன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தனக்கு கிடைத்த அழைப்பிற்கமைய, அந்த கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளதாக சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** சுழிபுரம், பத்தானைக் கேணியடி தொல்புரம் மாமுனை, நாகர்கோவில், செம்பியன்பற்று, [illegible] முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மகாறம்பைக்குளம் நியூ ஸ்ரீல் பிவிரி லிமிடெட், இரும்பு தொழிற்சாலை, தந்திரிமலை சந்தி (கயசிங்கபுர இராணுவ முகாம்), அழகாபுரி (அடப்பங்குளம்), இலுப்பைக்குளம், கப்பாச்சி, முகத்தாங்குளம் 1ஆவது பண்ணை, முதலியார் குளம், நேரிய குளம், சின்ன சிப்பிகுளம், தந்திரிமலை வீதி, துட்டு [illegible] பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## காணி உறுதி பெற்றுத் தருவதாகக் கூறி மோசடியில் ஈடுபட்டவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சியில் காணி உறுதி பெற்றுத்தருவதாக கூறி ஏழு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மோசடியில் ஈடுபட்ட நபர்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பிறிதொரு நபரிடம் சாதாரண காணி அனுமதிப் பத்திரத்தை கிராம உத்தியோகத்தர் ஊடாக காணி உறுதியாக மாற்றித் தருவதாவும் அதற்கு ஏழு இலட்சத்து 50 ஆயிரம் தருமாறும் கூறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து மேலதிகமாக 30 ஆயிரம் ரூபாய் தருமாறும் கூறியுள்ளார்.

சந்தேகமடைந்த மற்றைய நபர் பிரதேச செயலரிற்கு தெரியப்படுத்தி தருமபுரம் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து மோசடியில் ஈடுபட்ட நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணையை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 75

இதைத் தொடர்ந்து வந்த செய்திகளின்படி ரஷ்ய பீரங்கிகள், ரஷ்யப்படைகள் "மனிதாபிமான நடவடிக்கை" என்று கூறி எல்லையைக் கடந்து, ரஷ்ய சார்புப் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளிலும் நோவாசோவ்ஸ்க் அருகே உள்ள தோனெட்ஸ்க் மாநிலத்தின் தென்கிழக்கு பகுதி போன்றவற்றிலும் ரஷ்ய ஊடுருவியதாகக் கூறப்படுகிறது.

உக்ரைனின் பாதுகாப்புச் சேவையின் தலைவர் வாலன்டின் நலிவைசென்கோ, ஓகஸ்ட் 22 நிகழ்வுகளை "உக்ரைனின் ரஷ்யாவின் நேரடிப் படையெடுப்பு" என்று அழைத்தார். ஆனால் மேற்கத்தேய மற்றும் உக்ரைனிய அதிகாரிகள் இதை ரஷ்யவின் "திருட்டுத்தனமான படையெடுப்பு" என்று அழைத்தனர்.

டான்பாஸில் ரஷ்யப்படைகள் இருப்பது குறித்த ரஷ்யாவின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு தெளிவற்றதாக இருந்தது. உக்ரைனில் ரஷ்யாவின் "வழக்கமான ஆயுதப் படைகள்" இருப்பதை அதிகாரபூர்வ அமைப்புகள் மறுத்தாலும், "இராணுவ வல்லுநர்கள்" இருப்பதை பல சமயங்களில் உறுதிப்படுத்தினார்கள். சிலர் "ரஷ்ய மொழி பேசும் மக்களைப் பாதுகாப்பதற்காக ஆயுதப் படைகளை அனுப்ப ரஷ்யா நிர்ப்பந்திக்கப் பட்டது" என்ற வாதத்துடன் கருத்துரைக்கின்றனர்.

ரஷ்யப் படையெடுப்பின் விளைவாக, கிளர்ச்சியாளர்கள் உக்ரைனிய அரசாங்கத்தின் முந்தைய இராணுவத் தாக்குதலின் போது இழந்த பெரும்பாலான பகுதிகளை மீண்டும் பெற்றனர்.

**உக்ரைன், ரஷ்யா, தோனேஸ்க் மக்கள் குடியரசு மற்றும் லுகன்ஸ்க் மக்கள் குடியரசு ஆகியவை 5 செப்டம்பர் 2014 அன்று மின்ஸ்க் நெறிமுறை என்ற போர் நிறுத்த ஒப்பந் தத்தில் கையெழுத்திட்டன.**

மின்ஸ்க் நெறிமுறையில் பன்னிரெண்டு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. அவை (1) உடனடி இருதரப்பு போர் நிறுத்தத்தை உறுதி செய்தல். (2). ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பினால் போர் நிறுத்தத்தின் கண்காணிப்பு மற்றும் சரிபார்ப்பை உறுதி செய்தல்.

(3) "தோனேஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மாநிலங்களின் குறிப்பிட்ட மாவட்டங்களில் உள்ளூர் சுய-ஆளுகைக்கான தற்காலிக உத்தரவில்" உக்ரைனிய சட்டத்தை ஏற்றுக்கொள்வது உட்பட அதிகாரப் பரவலாக்கம்.

(4) உக்ரைனிய-ரஷ்ய எல்லையின் நிரந்தர கண்காணிப்பு மற்றும் உக்ரைன் மற்றும் ரஷ்ய கூட்டமைப்பின் எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பு மண்டலங்களை உருவாக்குவதன் மூலம் OSCE ஆல் சரிபார்ப்பதை உறுதி செய்தல். (5) பணயக்கைதிகள் மற்றும் சட்ட விரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து நபர்களையும் உடனடியாக விடுவித்தல். (6) தோனேஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மாகாணங்களின் சில பகுதிகளில் நடந்த நிகழ்வுகள் தொடர்பாக மக்கள் மீது வழக்குத் தொடரப் படுவதையும் தண்டிப்பதையும் தடுக்கும் சட்டம்.

(7) பிரச்சினை உள்ளடக்கிய தேசிய உரையாடலைத் தொடர்தல் (8) டான்பாஸில் மனிதாபிமான நிலைமையை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் (9) உக்ரைனிய சட்டத்தின்படி "தோனேஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மாகாணங்களின் குறிப்பிட்ட மாவட்டங்களில் உள்ளூர் சுய-ஆளுகைக்கான தற்காலிக உத்தரவின் பேரில்" முன் கூட்டியே உள்ளாட்சித் தேர்தல் களை உறுதிசெய்தல்.

(10) உக்ரைன் பிரதேசத்தில் இருந்து சட்ட விரோத ஆயுதக் குழுக்கள், இராணுவ உபகரணங்கள் மற்றும் போராளிகள் மற்றும் கூலிப்படைகளை திரும்பப் பெறுதல்.

(11) டான்பாஸ் பிராந்தியத்திற்கான பொருளாதார மீட்பு மற்றும் புனரமைப்புக்கான திட்டத்தை ஏற்றுக்கொள்வது. (12) ஆலோசனைகளில் பங்கேற்பவர்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்பை வழங்குதல் என்பனவாகும்.

சுவிஸ் தூதர் மற்றும் OSCE பிரதிநிதி ஹெய்டி டாக்லியாவினி, உக்ரைனின் முன்னாள் ஜனாதிபதி (ஜூலை 1994 முதல் ஜனவரி 2005 வரை) மற்றும் உக்ரைனிய பிரதிநிதி லியோனிட் குச்மா, உக்ரைனுக்கான ரஷ்யத் தூதர் மற்றும் ரஷ்ய பிரதிநிதி மிகைல் சுராபோவ், கிளர்ச்சியாளர் தலைவர்கள் அலெக்சாண்டர் ஜாகர்சென்கோ மற்றும் இகோர் ப்ளாட்னிட்ஸ்கி ஆகியோர் ஆவணத்தில் கையெழுத்திட்டனர்.


இந்த குறிப்பாணை நெறிமுறையை செயற்படுத்துவதை தெளிவுபடுத்தியது. சில சமாதான நடவடிக்கைகளில் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களாவன பாதுகாப்பு வலயத்தின் மீது போர் விமானங்கள் செல்வதை தடை செய்ய வேண்டும்.

(தொடரும்)

# கொரோனாத் தொற்று நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

**நாட்டில் மேலும் 3 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை உறுதிப்படுத்தியுள்ளார்.**



இதேவேளை, நாட்டில் மேலும் 27 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொரேனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 670,471 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 200 | 300 | 320 |
| உருளைக்கிழங்கு | 280 | 300 | 280 | 320 |
| பச்சைமிளகாய் | 300 | 200 | 280 | 350 |
| தக்காளி | 250 | 200 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 200 |
| கோவா | 450 | 300 | 400 | 400 |
| கரட் | 300 | 380 | 400 | 450 |
| பூசணி | 130 | 150 | 150 | 200 |
| புடோல் | 120 | 200 | 120 | 120 |
| வாழைக்காய் | 200 | 220 | 140 | 160 |
| சின்னவெங்காயம் | 350 | 300 | 200-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 500 | 450 | 650 | 800 |
| வெண்டக்காய் | 180 | 200 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 240 |
| பயற்றங்காய் | 250 | 300 | 260 | 240 |
| லீக்ஸ் | 300 | 220 | 300 | 400 |
| பீற்றூட் | 180 | 160 | 180 | 240 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 1200 | 1100 | 700 | 800 |
| போஞ்சி | 550 | 600 | 700 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 150 | -- | 300 |
| கீரை – 1 பிடி | 100 | 120 | 100 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-90 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 340 | 350 |
| முள்ளங்கி | 120 | 200 | 120 | 240 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 60 |
| வல்லாரை | 25 | 20 | 40 | 50 |
| ஈரப்பலா | 80 | 80 | 100 | 150 |

# விசேட பொதுமன்னிப்பின் கீழ் 417 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

கைதிகள் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் 417 கைதிகள் விசேட பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசியலமைப்பின் 34 ஆவது சரத்தின்படி ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு அமைய இந்த பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களுக்கான அபராதங்களை செலுத்த முடியாத மற்றும் சிறிய குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளே இவ்வாறு பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட அரச...

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கை முன்னிட்டு, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

இந்நிலையில், அன்றைய தினம் விசேட அரச விடுமுறை தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்க விடுமுறை தினம் தடையாக இருக்கமாட்டாதென பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## 4 நாட்களேயான...

யில் கடந்த வெள்ளிக்கிழமை பெண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 8.45 மணியளவில் குழந்தைக்கு பாலூட்டி தாயார் 9 மணியளவில் பிள்ளை அசைவற்று இருப்பதை கண்டுள்ளார்.

உடனடியாக வைத்தியர்கள் பரிசோதித்தபோது இறந்தமை தெரிய வந்தது.

இம்மரணம் தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையில் தாய்ப்பால் சுவாச குழாயில் சென்று மரணம் சம்பவித்ததாக தெரிவிக்கப்பட்டது.(ம-7,60)

## ரயில் மோதி...

வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான மைக்கல் தினகரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,104)

## புளியங்குளத்தில்...

டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் சிகிச்சை பலனின்றி பஞ்சநாதன் குகேந்திரன் (வயது-49) என்ற நபரே மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,299)

## வலுவான...

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களுக்கு பொறுப்புக்கூறல் தொடர்பான, தற்போதைய ஆணைகளை வலுப்படுத்தும் மற்றும் இலங்கையில் சீரழிந்து வரும் மனித உரிமை நிலைமைகளைக் கண்காணிக்கும் வகையில் வலுவான தீர்மானத்தை முன்மொழிந்துள்ளது.

இந்தத் தீர்மானத்தை பேரவையில் நிறைவேற்ற வேண்டும் என்று குறித்த நான்கு அமைப்புக்களும் பேரவை யின் உறுப்பு நாடுகளிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளன.

கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்துவது உட்பட, நடப்பு துஷ்பிரயோகங்களுக்குத் தீர்வு காணவும் இலங்கைக்கு இந்தத் தீர்மானத்தின் மூலம் அழைப்பு விடுக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளன.

இலங்கை, கடுமையான பொருளாதார, அரசியல் மற்றும் மனித உரிமைகள் நெருக்கடியை சந்தித்து வருகிறது. இலங்கையில் கடந்தகால சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் பல ஆண்டுகளாக நீதியைக் கோரி வருகின்றனர்.

அதே நேரத்தில் அடுத்தடுத்த இலங்கை அரசாங்கங்கள் வாக்குறுதிகளை மீறி, பொறுப்புக்கூறலைத் தடுத்து, போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை உயர் பதவிக்கு உயர்த்தியுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, பொறுப்புக்கூறல் மற்றும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் வகையில், இலங்கை மீது அழுத்தம் கொடுக்கும் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இலங்கை தொடர்பான தமது அறிக்கையில், ஆழ்ந்த இராணுவமயமாக்கல், நிர்வாகத்தில் பொறுப்புக்கூறல் இல்லாமை, தண்டனையின்மை என்பன கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்திற்கான சூழலை உருவாக்கியது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் விபரித்துள்ளார்.

எனவே இலங்கைக்குள் பொறுப்புக்கூறல் இல்லாத நிலையில், மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள், குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட இலங்கையர்களை சர்வதேச நீதிமன்றங்களில் விசாரணை செய்ய வேண்டும் என்றும், வெளிநாடுகளில் உள்ள திருடப்பட்ட சொத்துக்களை கண்டுபிடித்து முடக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர் கோரியிருந்தார்.

இதேவேளை பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், இடைக்காலத்தில் அதன் பயன்பாட்டிற்கு உடனடித் தடை விதித்தல், சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் மறுபரிசீலனை செய்தல், சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்படாத குற்றச்சாட்டுகளை எதிர்நோக்காத அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பணிப்பாளர் யாமினி மிஸ்ரா கோரியுள்ளார்.

இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மனித உரிமைகள் பேரவையில் பல வாக்குறுதிகளை வழங்கின. எனினும் அவை முறியடிக்கப்பட்டன அல்லது மறுக்கப்பட்டன என்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே உறுப்பு நாடுகள் இலங்கைக்கு அதன் உறுதிப்பாடுகள் மீது அழுத்தம் கொடுப்பதுடன், தற்போதைய துஷ்பிரயோகங்களை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் யாமினி மிஸ்ரா வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## பயங்...

முத்து திரட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் நான்காவது நாளாகவும் நேற்று இடம்பெற்றது. (ம-7,100)

## முல்லையில் விபத்து; குடும்பஸ்தர் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட முத்தையன் கட்டுப்பகுதியில் வயல் உழவிற்காக உழவு இயந்திரத்தினை வீதியால் செலுத்திக்கொண்டிருந்த போது உழவுஇயந்திரம் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து விபத்திற்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இதில் 32 வயதுடைய பெரியசாமி ராஜ்குமார் என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். (ம-7)

## சீனப் பிரதிநிதி...

நிதியான தூதுவர் சென் சூ சந்தித்தார்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையே நீண்டகால நட்புறவு பாரம்பரியம் இருப்பதாகவும், இலங்கை தற்போது எதிர்நோக்கும் சிரமங்களுக்கு சீனத் தரப்பு கவலையை தெரிவிப்பதாகவும் தூதுவர் சென் சூ இதன் போது குறிப்பிட்டார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 13/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1332
வெற்றி இலக்கங்கள்
கன்னி 2 9 1 9 9 9
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.09.13 சீட்டிழுப்பு இலக்கம் 3119
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 25 63 66 68
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 13/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1225
G 13 41 46 56 74

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.09.13
சீட்டிழுப்பு இலக்கம் 186
தனுசு 01 03 33 45 தனுசு
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/09/13
சீட்டிழுப்பு இலக்கம் 4877
K 5 1 2 8 7 6
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.09.13
சீட்டிழுப்பு இலக்கம் - 907
S 14 17 64 81
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1852 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.09.13 தினம் செவ்வாய்க்கிழமை
V 04 45 68 71
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,409,780/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.09.13
சீட்டிழுப்பு இல : 4013
வர்ணம் : இள நீலம்
ரூ. 3,575,140/-
வெற்றி இலக்கங்கள் 26 41 57 72 Z

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 222
சீட்டிழுப்பு திகதி 2022.09.13
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 12 13 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,112,840/-

ஸ்ரீ
சுப்பர் ஜக்போட் ரூ. 4,027,092.20
திகதி 2022-09-13
வெற்றி வாரம் 3564
வெற்றி இலக்கங்கள் 08 09 25 55 மிதுனம்
வர்ணம் சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,746,700/-

26 லக்ஸ்பன
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 23 01 34 47 76
சீட்டிழுப்பு வாரம் 1028
2022.09.13 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 260,393,281/-
Web : www.dlb.lk

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1678
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.09.13
ரூ. 3,399,980/-
வெற்றி இலக்கங்கள் 36 45 60 72 V


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அதிக எண்ணிக்...

ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக் கடிக்கு மத்தியில், அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகளை மகிழ்விப்பதற்கும் அரசியல் அதிகாரத்தை தக்க வைப்பதற்கும் அதிக எண்ணிக்கையிலான அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்களை நிய மிப்பதால் அதிக செலவுகள் ஏற்படும் என்று தெரிவித்துள்ளது.

அமைச்சர்கள் தங்களுக்கு உரிய சம்பளத்தை மாத்தி ரமே ஏற்றுக்கொள் வார்கள் என அர சாங்கத்தின் பிரதம கொறடா தெரிவித் துள்ள போதும் அதனை நிறைவே ற்றுவது கடினமான விடயம் என அமை ச்சர்கள் பலர் தெரி வித்துள்ளதாக பஃ ப்ரல் சுட்டிக்காட்டியு ள்ளது. (ம-7)


# கல்லீரல் தேவை

58 வயதுடைய ஒருவருக்கு கல்லீரல் அவசரமாகத் தேவைப்படுகின்றது.

20 - 45 வயதுக்குட்பட்ட $B^+$ அல்லது $O^+$ இரத்தவகையைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

**தயவுசெய்து ஒரு நபரின் உயிரைக் காப்பாற்ற உதவுமாறு வேண்டுகின்றோம்.**

தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C-4904)

தொடர்புகளுக்கு:- **K. வரதன் 077 757 0103**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 09 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12761)

தொடர்புகளுக்கு:- **076 755 8606, 077 911 6983**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 90 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1½ Km தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1½ Km தூரத்தில்
- புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
- 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12761)

**077 658 5999, 076 436 5814, 077 874 8135**

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

# றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (12780)

# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 42 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. சொந்தமாக தொழில் புரிகிறார்.

வைபர் & வாட்ஸ்ஆப் (12781)

**077 905 8615**


# கண்ணீர் அஞ்சலி

*கண்கண்ட தெய்வம்*
*கண் வைத்திய நிபுணர்*

அமரர்
**சரவணமுத்து குகதாசன்**

அவர்களுக்கு கண் நிறைந்த கண்ணீர் அஞ்சலிகள் (12778)



வண். மேற்கு வைத்தியசாலை
van west Clinic & Nursing Home
Vannarpannai, Jaffna.
நிர்வாகம், ஊழியர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

## கண் வைத்திய நிபுணர்

## அமரர் ச.குகதாசன்



தோற்றம்:- 07.09.1948 | மறைவு 13.09.2022

அன்பு, கருணை, நேர்மை, விசுவாசம் நிறைந்த கண் வைத்திய நிபுணர் அமரர் ச.குகதாசன் அவர்கள் கண் சிகிச்சை நிபுணத்துவத்தின் முன்னோடியாவார்.

எமது வைத்தியசாலையின் ஸ்தாபககால, வைத்திய நிபுணத்துவ ஆலோசகராக ஆரம்பித்து இன்றுவரை விருப்புடனும் விசுவாசத்துடனும் மக்கள் சேவை புரிந்த ஒரு மகான். அவரது குடும்பத்தவரது துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**முகாமையாளரும் வைத்தியர்களும்**
**பணியாளர்களும்**
**ரூபின்ஸ் தனியார் மருத்துவமனை, நெல்லியடி.**

(C-4905)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.